பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை. ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 புரட்டாதி 31 வியாழக்கிழமை (17-10-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:324



யாழ்ப்பாணத்தில் ஊடகத்துறையினருக்கான பயிற்சி நிலையம் நேற்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அதன்போது எடுக்கப்பட்ட படம் இது. நிகழ்வில் கலந்து கொண்ட டென்மார்க் வெளிவிவகார அமைச்சு இராஜாங்கச் செயலர் பீட்டர் வீஷோல்ட் ஹன்சன், டென்மார்க் தூதுவர் மைக்கேல் ஸ்ரீன்பெர்க் ஆகியோருடன் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் காணப்படுகிறார். (விரிவான செய்தி 2ஆம் பக்கத்தில்)

# 19ஆவது அரசமைப்புத் திருத்தம்: அரசு தற்காலிகமாகக் கைவிட்டது!

## உயர்நீதிமன்றத் தீர்ப்பின் விளைவு

கொழும்பு,ஒக்.17

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதானால் அதற்கு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவை பெறுவதோடு சர்வஜன வாக்கெடுப்புமூலம் மககள் அங்கீகாரமும் பெறப்படவேண்டும்.

- இவ்வாறு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதாக அறியவருகிறது.

இத்தீர்ப்பை அடுத்து இந்தத் திருத்தத்தைக் கொண்டுவரும் முயற்சியை அரசு தற்காலிகமாகக் கைவிட்டிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. 19ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக 24 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்களான எஸ்.டபிள்யூ.டி வடுகொடபிட்டிய, ஹெக்டர் எஸ்.யாப்பா, ஷிராணி பண்டாரநாயக்க, அமீர் இஸ்மாயில், டி.டபிள்யூ. எதிரிசூரிய, அசோக டி சில்வா ஆகிய எழுவர் கொண்ட குழுவினால் இம்மனுக்கள் விசாரணை செய்யப்பட்டன.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமுன்தினம் இரவு பிரதம நதியரசர் சரத் என்.சில்வாவின் செயலாளரினால் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் தீர்ப்பு அறிவிக்கப்பட்டது எனத் தெரிகிறது. இத்திருத்தச் சட்டமூலத்தை நிறைவேற்ற சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் இளைஞர் கடத்தப்பட்டதை அடுத்து

# அக்கரைப்பற்றில் ஹர்த்தால்; ஊரடங்கு உத்தரவு அமுல்!

## மக்கள் கூட்டத்தைக் கலைக்க கண்ணீர் புகைக் குண்டு வீச்சு!!

அக்கரைப்பற்று,ஒக்ரோபர்,17

**அக்கரைப்பற்றில் நேற்றுக் காலை பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அரச திணைக்களங்கள், வங்கிகள், பாடசாலைகள் என்பன இயங்கவில்லை. வாகனப் போக்குவரத்தும் முற்றாக ஸ்தம்பித்திருந்தது. இந்த ஹர்த்தாலினால் அசம்பாவிதங்கள் நிகழலாம் என்ற அச்சத்தில் நகரில் திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைப் பொலீஸார் கண்ணீர்ப்புகை பிரயோகித்துக் கலைத்தனர். பின்னர் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக முற்பகல் முதல் ஊரடங்குச்சட்டத்தைப் பிறப்பித்தனர். விசேட அதிரடிப்படையினரும் சேவைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.**

அக்கரைப்பற்று - அம்பாறை வீதியில் நேற்றுமுன்தினம் இனந் தெரியாத ஆயுதக் கோஷ்டி ஒன்றினால் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே நேற்றுக் காலை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இலக்கத்தகடு இல்லாத வான் ஒன்றில் வந்த ஒரு கோஷ்டியினரே அந்த இளைஞரைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இக்கடத்தல் சம்பவத்தைக் கண்டித்து அக்கரைப்பற்றில் ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுக்கப்பட்டது. நகர மணிக்கூண்டுக் கோபுரம் அருகே பெருந்திரளான மக்கள் காலை

(14ஆம் பக்கம் பார்க்க)

# கடலில் புலிகள் பயிற்சி; நிறுத்துமாறு கோரிக்கை

## கண்காணிப்புக்குழு விடுத்தது

கொழும்பு,ஒக்.17

கடற்புலிகள் ஆயுதங்கள் பொருத்தப்பட்ட இரண்டு படகுக்ளை வைத்துக்கொண்டு பயிற்சியில் ஈடுபட்டதை கண்காணிப்புக் குழுவினர் கண்டுவிட்டு அப்படியான பயிற்சிகளை நிறுத்துமாறு தெரிவித்தனர் என்று இணையச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இணையச் செய்தியின்படி முல்லைத்தீவுக்குத் தெற்கே 12 கிலோ மீற்றருக்கு அப்பால் அலம்பில் பகுதியில் கடற்படைப் படகு ஒன்று கண்காணிப்பில் ஈடுபட்டு இருந்தது. அப்போது அந்தப் படகில் இருந்த கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் கடற்புலிகள் பயிற்சியில் ஈடுபட்டு இருந்ததை அவதானித்தனர்.

பயிற்சியை நிறுத்தும்படி கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் சமிக்ஞை கொடுத்தனர். அதை அடுத்து இரண்டு படகுகளும் அங்கிருந்து மறைந்துவிட்டன.

- இப்படி இணையச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

(ம)

# சமாதான முன்னெடுப்பில் அரசும் புலிகளும் உறுதி

## கண்காணிப்புக் குழுத் தலைவர் அறிக்கை

கொழும்பு,ஒக்.17

அரசும் புலிகளும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச்செல்வதில் உறுதியாக இருக்கின்றனர். அது எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சகல தரப்பும் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்க வேண்டும்.

கிழக்கில் அண்மையில் ஏற்பட்ட வன்செயல்கள் குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசிய பின்னர் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரொண்ட் புரு கொவ்டே விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்

(14ஆம் பக்கம் பார்க்க)

# உண்மையைத் தெளிவுபடுத்தி விடுதலைப் புலிகள் அறிக்கை

கொழும்பு,ஒக்.17

அக்கரைப்பற்று முஸ்லிம் இளைஞர் ஒருவர் ஆயுதம் தரித்த குழு ஒன்றினால் இலக்கத்தகடு இல்லாத வான் ஒன்றில் கடத்தி செல்லப்பட்டார் என்று கூறப்படும் பிரச்சினைக்குரிய சம்பவம் பற்றி உண்மை நிலையை தெளிவுபடுத்தி விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

இன்று எம் மத்தியில் எழுந்துள்ள இச்சூழ்நிலை எமது அமைதிச் சூழ்நிலையை குழப்புவதற்காக சில தீயசக்திகளால் சுயலாபம் கருதி ஏற்பாடு செய்யப்பட்டதாகும். ஆயுதத்துடன் வந்து எவரையும் கடத்தும் அளவிற்கு இப்போது எமக்கு எந்தவித தேவையும் இல்லை. இப்போது நாம் எங்கேயும் ஆயுதத்துடன் வலம் வரவும் இல்லை என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ளவேண்டும்.

எனவே, மிக அரிய போராட்டத்தின் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட இச் சமாதானச் சூழலை நாம் இறுதி

(14ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடுப்புச்சட்ட வழக்குகள்:

# குற்ற ஒப்புதல் வாக்குமூலம் மட்டும் ஒருவரை குற்றவாளியாக்க முடியாது

## உயர்நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவ தீர்ப்பு

கொழும்பு,ஒக்.17

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட குற்ற ஒப்புதல் வாக்கு மூலத்தை மட்டும் ஒரு சாட்சியமாக வைத்து ஒருவரைக் குற்றவாளியாக்க முடியாது.

- இவ்வாறு தெரிவிக்கும் மிக முக்கியமான வரலாற்றுத் தீர்ப்பு ஒன்றை உயர்நீதிமன்றம் நேற்று வழங்கியிருக்கின்றது .

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாகமணி தெய்வேந்திரம் என்பவர் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனு ஒன்றின் மீது இந்த வரலாற்றுத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவர் 1995ஆம் ஆண்டு கொழும்பு லெயாட்ஸ் வீதியில் சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் பணியாற்றிக்கொண்டிருந்த சமயம் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து பெற்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவர் யாழ்ப்பாணம் கட்டுவனில்

(14ஆம் பக்கம் பார்க்க)

நேற்றுமுன்தினம் வன்னியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்து உரையாடிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள்.



# வடக்கு - கிழக்கை மீளக்கட்டியெழுப்ப தாராளமாக நிதியுதவி வழங்குங்கள்!

## ஐரோப்பிய பிரதிநிதிகளிடம் பாலசிங்கம் வேண்டுகோள்

கிளிநொச்சி,ஒக்.17

போரினால் பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள வடக்கு - கிழக்கின் மீள்கட்டுமானப் பணிகளுக்கு உலகநாடுகள் தாராளமாக நிதியுதவி வழங்கவேண்டும்.

- இவ்வாறு தன்னைச் சந்தித்த ஐரோப்பிய [illegible] தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முற்பகல் [illegible] முதல் இரண்டு மணி நேரம் கிளிநொச்சியில் [illegible] (14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# அரசாங்க சேவை நியமனங்களை அரசு உடனடியாக இடைநிறுத்தம்

கொழும்பு,ஒக்.17

அரசாங்க சேவைக்கு நியமனங்கள் மேற்கொள்வதை உடனடியாக இடைநிறுத்துவதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அவ்வாறே காலியாகவுள்ள வெற்றிடங்களை ஒழிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

அமைச்சுகள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகிய அனைத்துக்கும் இத்தீர்மானங்கள் பொருந்தும்.

அரசாங்கத்தின் இத்தீர்மானங்களை திறைசேரியின் செயலாளரான சரித்த ரத்வத்த சுற்றறிக்கை மூலம் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்திருக்கின்றார்.

சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை கட்டாயமாகக் கடைப்பிடிக்குமாறும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

எவ்வாறாயினும், வெளிநாட்டு நிதியுதவிகள் மூலம் செயற்படும் நிறுவனங்களின் திட்டங்கள் தொடர்பாக இச்சுற்றுநிருபம் பொருந்தாது என்று திறைசேரி செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

எந்த ஓர் அமைச்சுக்காவது, திணைக்களத்துக்காவது விசேட நிலைமையின் கீழ் ஆட்சேர்ப்புக்கோ, பதவி உருவாக்கலுக்கோ அவசியம் ஏற்பட்டால் அது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு பூரண விவரங்களுடன் தனக்கு அறிவிக்குமாறும் திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்த சுற்றிக்கையில் மேலும் அறிவித்திருக்கிறார். (ம)

## கொள்ளைக் கும்பலிடமிருந்து 3 அங்குலம் மட்டுமே நீளமான அபூர்வ துப்பாக்கி சிக்கியது!

கொழும்பு,ஒக்.17

இராணுவத்திடம் கூட இல்லாத மிக அபூர்வமான கைத்துப்பாக்கி ஒன்று கொள்ளைக்கும்பல் ஒன்றிடமிருந்து பேலியகொடைப் பொலீஸாரினால நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டது.

இந்தக் கைத்துப்பாக்கியின் நீளம் மூன்று அங்குலம் மட்டுமே. ரி.56 ரக தன்னியக்க துப்பாக்கிக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களை அத்துப்பாக்கிக்குப் பயன்படுத்த முடியும் எனப் பொலீஸார் கூறுகின்றனர். ஒரு தடவைக்கு ஒரு தோட்டாவை மட்டுமே பயன்படுத்தலாம்.

இவ்வாறான ஒரு கைத்துப்பாக்கி இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்டது இதுவே முதற்றடவை எனக் கூறப்படுகிறது.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் நகைக்கடைகளில் கொள்ளையடிப்பதில் ஈடுபட்ட கொள்ளைக் கும்பலில் மூவர் கைதுசெய்யப்பட்டபொழுதே இந்தக் கைத்துப்பாக்கி

(13ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகளில்

# அரசும் விடுதலைப் புலிகளும் பொறுப்புடன் செயற்படுகின்றனர்

## டென்மார்க் இராஜாங்க செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்ரோபர்17

**இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளில் அரசும் விடுதலைப் புலிகளும் முழுப்பங்களிப்புடன் - பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இந்த முயற்சி மூலம் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஒன்றைக் காணமுடியும் என நாம் நம்புகிறோம்.**

**- இப்படிக் கூறினார் டென்மார்க் வெளிவிவகார அமைச்சு இராஜாங்கச் செயலர் பீற்றர் லீஷோல்ட் ஹன்சன்.**

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்த அவர், ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய அங்குரார்ப்பணவைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இப்படிக் கூறினார்.

யாழ் பல்கலைக்கழகமும், யுனெஸ்கோவும் இணைந்து ஆரம்பித்துள்ள இந்த நிலையத்திற்கு டென்மார்க் அரசு உதவிகளை வழங்க முன் வந்துள்ளது.

மேற்படி நிலைய அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மாலை யாழ். சிற்றி ஹோலில் நடைபெற்றது.

இலங்கைக்கான டென்மார்க் தூதர் மைக்கேல் ஸ்ரின்பெர்க் நிலையத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடந்த இந்த நிகழ்வு செயலர் பீற்றர் லீஷோல்ட் ஹன்சன் மேலும் கூறியதாவது:-

சமாதான முயற்சிகளில் பத்திரிகையாளர்கள் முக்கிய பங்கு வகிக்கின்

(13ஆம் பக்கம் பார்க்க)



ஊடக வள பயிற்சி நிலையத் திறப்புவிழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை

## அரசியல்துறையின் கலந்துரையாடல்

தென்மராட்சி,ஒக்.17

தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் கலந்துகொள்ளும் இந்தக் கலந்துரையாடலில் செயலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ள வேண்டுமென தென்மராட்சி அரசியல் துறைப் பொறுப்பாளர் கலைவாணன் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-ரி)

## கூட்டுச் செயலணிக்குழுவில் புலிகளின் பிரதிநிதி பாலகுமார்?

கொழும்பு,ஒக்.17

வடக்கு - கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக அமைக்கப்படவிருக்கும் அரசு - புலிகள் கூட்டு செயலணிக் குழுவில் புலிகள் இயக்கத்தின் சிரேஷ்ட பிரதிநிதியாக வி.பாலகுமார் இருப்பார் என சில செய்தி ஏஜென்ஸிகள் தகவல் வெளியிட்டுள்ளன.

புலிகள் இயக்கத்தின் நிதித்துறைப் பொறுப்பாளரான தமிழேந்தி இக்குழுவில் புலிகள் இயக்க மற்றைய பிரதிநிதியாக இருப்பார் என தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாய்லாந்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற முதற்சுற்றுப் பேச்சுக்களில் இச்செயலணிக் குழுவை அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே.

ஈரோஸ் அமைப்பின் முன்னாள் தலைவரான பாலகுமார் புலிகள் இயக்கத்தின் முக்கிய பிரமுகர்களில் ஒருவராக இருந்து வருகிறார். (ம)

## பருத்தித்துறை-தாளையடி பஸ் சேவை மாசாருடன் இடைநிறுத்தப்பட்டது

### பாலம் பழுதடைந்துள்ளமை காரணமாக

வடமராட்சி கிழக்கு,ஒக்.17

பருத்தித்துறை - தாளையடி பஸ் சேவை மாசாருடன் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

மருதங்கேணிப் பாலம் போக்குவரத்துச் செய்யமுடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளதினாலேயே பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் பயணிகள் 2மைல் தூரம் நடந்துசெல்லவேண்டியுள்ளது. மருதங்கேணிப் பிரதேசத்தில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள் இதனால் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளார்கள் என்று கூறப்பட்டது.

நீண்டகாலமாக இப்பாலத்தைத் திருத்தியமைக்கும்படி, அப்பகுதி பொது ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்து வந்தபோதிலும், இப்பாலம் இன்னமும் திருத்தியமைக்கப்படவில்லை. (ம-182)

## மேஜர் செந்தூரியின் வித்துடல் துயிலும் இல்லத்தில் விதைப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.17

கடந்த 14ஆம் திகதி சுகவீனம் காரணமாக சாவடைந்த விடுதலைப் புலிகளின் சோதியா படையணிப் போராளி மேஜர் செந்தூரியின் (கிரிஜா) வித்துடல் நேற்று மாலை 5.30மணிக்கு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக நேற்று சுன்னாகம் ஐயனார் கோயிலடியிலுள்ள அவரது இல்லத்தில் வித்துடல் வைக்கப்பட்டது. பிற்பகல் 2.30மணியளவில் அங்கிருந்து பாண்ட் வாத்தியம் சகிதம் எடுத்துவரப்பட்ட அவரது வித்துடல் சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அங்கு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

மேஜர் செந்தூரியின் பெற்றோர் ஈகச்சுடர் ஏற்றினர். பொதுமக்கள், போராளிகள் ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர். ஐயனார் சனசமூக நிலைய உறுப்பினர் க.கைலைநாதர் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறையின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்விழி, அரசியல்துறையைச் சேர்ந்த கமலினி, சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் இ.குமாரவேல், ஐயனார் சனசமூக நிலையத் தலைவர் எஸ்.சாம்பசிவம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர்.

பிற்பகல் 4.15 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் அவரது வித்துடல் அங்கிருந்து கே.கே.எஸ். வீதியூடாக எடுத்துவரப்பட்டு சுன்னாகம், மருதனார்மடம், உரும்பிராய் ஊடாக கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துவரப்பட்டது.

அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் வித்துடல் வைக்கப்பட்டு அகவணக்கம், உறுதியுரை, துயிலும் இல்லக்கீதம் என்பன இடம்பெற்றன.

தமிழீழ மாவீரர் பணிமனை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் அர்ச்சனா உறுதிரையை வாசித்தார். அதனைத்

(13ஆம் பக்கம் பார்க்க)

## இறுதி இலக்கை அடையும்வரை எமது தியாகங்கள் தொடரும்

### அஞ்சலி நிகழ்வில் தமிழ்விழி உரை

யாழ்ப்பாணம்,ஒக்.17

எமது விடுதலைப் போராட்டம் இறுதி இலக்கை அடையும் வரை எமது இழப்புக்களும் அர்ப்பணிப்புக்களும் தியாகங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

மேஜர் செந்தூரியின் இறுதி அஞ்சலிக்கூட்டம் நேற்றுப் பிற்பகல் 2.30 மணிக்கு சுன்னாகம் ஐயனார் சனசமூக நிலையத்தில் நடைபெற்றபோது அதில் அஞ்சலியுரை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்விழி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது போராட்ட வரலாற்றிலே 17 ஆயிரத்து 647 மாவீரர்கள் தமது

(13ஆம் பக்கம் பார்க்க)



மேஜர் செந்தூரியின் வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்துக்குள் எடுத்துச்செல்லப்படுவதையும் அங்கு வைத்து செந்தூரியின் பெற்றோர் மற்றும் உறவினர்கள் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்துவதையும் வித்துடல் அடங்கிய பேழை விதை குழியில் விதைக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : அற்புதன்)

# 100 சத வீத வாக்குகளால் சதாம் வெற்றி!



பாக்தாக்,ஒக்.17

ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் அடுத்து வரும் 7 ஆண்டுகாலப் பகுதிக்கு அதிபராகத் தொடர்ந்து பதவி வகிப்பது குறித்து நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சர்வஜன வாக்கெடுப்பில் அதிபர் சதாம் தொடர்ந்து பதவி வகிக்க ஈராக்கிய மக்கள் 100 சதவீத வாக்குகளை வழங்கி ஆதரவு தெரிவித்துள்ளதாக ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஈராக்கிய புரட்சி கட்டளைச் சபையின் உபதலைவர் இஜாட் இப்ராகிம் கூறுகையில், ஈராக்கில் வாக்களிக்கத் தகுதிபெற்ற ஒரு கோடியே 14 லட்சத்து 45ஆயிரத்து 638 வாக்காளர்கள் ஒவ்வொருவரும் அதிபருக்கு ஆதரவாகவே வாக்களித்துள்ளனர் என்றார்.

சர்வஜன வாக்கெடுப்பின் முடிவு வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலம் அறிவிக்கப்பட்டதும் தலைநகர் பாக்தாக் மகிழ்ச்சியால் தீர்க்கப்பட்ட துப்பாக்கி வேட்டுகளால் அதிர்ந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஈராக்கில் குர்திஷ் மக்கள் அதிகம் வாழும் பிரதேசத்தில் அதிபர் சதாமுக்கு எதிரான அலை இருந்ததாகவும் - அங்கும் அதிபருக்கு ஆதரவாக அனைத்து வாக்குகளும் இடப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது ஆச்சரிய மூட்டுவதாகவும் - ஜனநாயகத்திற்கான ஈராக்கிய நிறுவனம் கூறியுள்ளது.

ஆயினும், அமெரிக்காவும் பிரிட்டனும் அதிபர் சதாமை பதவியகற்றும் நோக்கத்துடன் ஈராக்மீது இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள வழி தேடும் நிலையில் சர்வஜன வாக்கெடுப்பில் அதிபர் சதாம் பெற்றுள்ள இந்தப் பாரிய வெற்றி, அமெரிக்காவின் முயற்சிகளில் தேக்க நிலையை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது. (ஒ)

# அமெரிக்கப்படைகள் நிலைகொள்ள பாகிஸ்தானில் எதிர்ப்பு கிளம்புகிறது!

இஸ்லாமாபாத்,ஒக்.17

'பாகிஸ்தானில் இருந்து அமெரிக்க படையினர் வெளியேற வேண்டும்' என்று பாகிஸ்தானியத் தேர்தலில் கணிசமான வெற்றிபெற்றுள்ள கட்சி கோரியுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த 10 ஆம் திகதி நடந்த தேர்தலில், எந்த ஒரு கட்சிக்கும் தனி பெரும்பான்மை கிடைக்கவில்லை. 1997 ஆம் ஆண்டு தேர்தலில் 2 இடங்களை மட்டுமே பிடித்த மதவாத கூட்டணியான முட்டாகித் மஜ்லிஸ் இ.அமல் 50 இடங்களைப் பிடித்து 3 ஆவது பெரிய சக்தியாக வளர்ந்து உள்ளது.

இந்தக் கூட்டணியின் உதவியுடன் பிற கட்சிகள் ஆட்சிக்கும் வரவும் வாய்ப்பு இருக்கிறது.

6 கட்சிகளைக்கொண்ட இந்த கூட்டணியின் தலைவரான குவாசி உசேன் அஹமது ஆட்சிக்கு இன்னும் வராத நிலையிலேயே, அமெரிக்க விரோதப் போக்கைப் பிரகடனப்படுத்தியுள்ளார்.

தீவிரவாதத்துக்கு எதிரான போர் தொடர்பாக ஆப்கானிஸ்தானில் இருந்து தீவிரவாதிகளை விரட்டுவதற்காக அமெரிக்க இராணுவம் பாகிஸ்தானில் இறங்கி உள்ளது. இந்த இராணுவம், பாகிஸ்தானில் இருந்து வெளியேறவேண்டும் என்று குவாசி உசேன் அஹமது கோரியுள்ளார். ஆப்கானிஸ்தானிலிருந்து தலிபான்களும், அல்கெய்டாவினரும் பாகிஸ்தானுக்குள் ஊடுருவியிருப்பதாகக் கூறும் அமெரிக்கா, தனது படையை அங்கு நிலை நிறுத்தியுள்ளது. இந்த நிலையில் அமெரிக்காவுக்கு செல்வாக்குப் பெற்ற கட்சியின் தலைவரின் எதிர்ப்பு தர்மசங்கடத்தைக் கொடுக்கும்.

அண்டை நாட்டில் நடத்தப்படும் ராணுவ நடவடிக்கைக்காக அன்னிய சக்திகளுக்கு நமது ராணுவ தளங்களையும், ராணுவ வசதிகளையும் கொடுக்கவேண்டிய தேவை இல்லை, தீவிரவாதம் என்ற பெயரில் பாகிஸ்தானை இராணுவத்தளமாகப் பயன்படுத்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம் அன்னிய துருப்புகள் நமக்குத் தேவையில்லை என்றும் குவாச் உசேன் தெரிவித்துள்ளார்.

இதேசமயம், மதவாதக்கட்சிகளின வெற்றி பாகிஸ்தானில் வாழும் சிறுபான்மையின மக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது.

14கோடி மக்கள்தொகை கொண்ட பாகிஸ்தானில் 3முதல்4சதவீதம் பேர் சிறுபான்மையினர். அவர்களில் ஒரு லட்சம் பேர் இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# 4 அல்கெய்டா தீவிரவாதிகள் பாகிஸ்தானில் கைதாகினர்

பெஷாவர்,ஒக்.17

சர்வதேச தீவிரவாதி ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த 4 பேரை, அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகளின் உதவியுடன் பாகிஸ்தான் பொலீஸார் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்தனர்.

பெஷாவருக்கு அருகே ஜலோஜை அகதிகள் முகாமில் அல்கெய்டா தீவிரவாதிகள் பதுங்கி இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தகவல் கொடுத்தனர். அதன் பேரில் அங்கு 3 மணிநேரம் தேடுதல் வேட்டை நடத்தி, சையது அப்துல் ரஹ்மான், அப்துல் கஃபார், அக்தர் முகம்மது, முகம்மது இதிரீஸ ஆகியோரைப் பொலீஸார் கைது செய்தனர். (ஒ)

# நடுக்கடலில் படகு பழுதானதால் 70 பேர் பட்டினியால் இறந்தனர்!

மொகாதி,ஒக்.17


படகு இயந்திரம் நடுக்கடலில் பழுதாகி, அந்தப் படகு இரண்டு வாரங்கள் தத்தளித்ததால் 70 பயணிகள் பட்டினியால் இறந்தனர்.

ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான சோமாலியாவைச் சேர்ந்த 120 பேர் வளைகுடா நாடுகளுக்கு வேலை தேடி ஒரு படகில் 17 நாள்களுக்கு முன்னர் புறப்பட்டனர். எதியோப்பியா நாட்டவரும் அதில் இருந்தனர். நடுக்கடலில அந்தப்படகின் இயந்திரம் பழுதானது. அந்தப் படகு திசைமாறி தத்தளித்தது. படகில் இருந்த உணவும் தண்ணீரும் தீர்ந்து போனதால் பயணிகள் பட்டினியால் ஒவ்வொருவராக இறந்தனர்.

மொகாதி - என்ற இடத்திலிருந்து ஆயிரத்து 200 கிலோமீட்டர்கள் தூரத்தில் உள்ள லாஸ்கோரே என்ற இடத்தில் இப்படகு கடந்த திங்கட்கிழமை கரை சேர்ந்தது. அதில் 50 பேர் மட்டுமே உயிருடன் இருந்தனர்.

அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். (ஒ)

# தனது கையெழுத்துடன் பின்லேடன் வாழ்த்து!




பின்லேடனின் கையெழுத்து

துபாய்,ஒக்.17

தீவிரவாதிகளுக்கு பின்லேடன் வாழ்த்து தெரிவித்து அவர் கையெழுத்திட்டு அனுப்பிய அறிக்கை தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது.

அமெரிக்க நகரங்கள் மீது கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம் திகதி அல்கெய்டா தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதற்கு காரணமான பின்லேடனைப் பிடிக்க அமெரிக்க ஆப்கானிஸ்தான்மீது போர் தொடுத்தது.

இதனால் ஆப்கானிஸ்தானில் தலிபான் ஆட்சி அகற்றப்பட்டபோதிலும், பின்லேடனைப் பிடிக்க முடியவில்லை. அவர் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருகிறார். அவர் எங்கிருக்கிறார் என்பதும் தெரியவில்லை.

இந்த நிலையில் குவைத் மற்றும் ஜேர்மன் நாடுகளில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பின்லேடன் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் நாட்டில் உள்ள கிறிஸ்தவ நிலை மீதும், குவைத் நாட்டில் அமெரிக்க ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராகவும், வீரப் புதல்வர்கள் (தீவிரவாதிகள்) நடத்திய தாக்குதலுக்கு எமது பாராட்டுக்கள் என்று பின்லேடன் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகளில் மேலும் மனிதப் படுகொலைகள் நடக்கும் என்றும் பின்லேடன் எச்சரித்துள்ளார்.

பின்லேடன் வெளியிட்ட அறிக்கை கத்தார் நாட்டின் அல்ஜஸீரா தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டது. அமெரிக்கத் தாக்குதலுக்குப் பிறகும் பின்லேடன் உயிருடன் இருக்கிறார் என்பதைக் காட்டும் உறுதியான சான்றாக இந்த அறிக்கை கருதப்படுகிறது. (ஒ)

## பாப்பரசர் பதவியேற்ற 24 ஆவது ஆண்டு விழா

வத்திகான்,ஒக்.17

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் பொறுப்பை ஏற்று 24 ஆவது ஆண்டு நேற்று கொண்டாடப்பட்டது.

82 வயதான இவர் 1978ஆம் ஆண்டு ஒக்ரோபர் 16ஆம் திகதி பாப்பரசராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 455 ஆண்டு காலவரலாற்றில் இத்தாலியைச் சேராத ஒருவர் பாப்பரசராகத் தேர்ந்து எடுக்கப்பட்டது அதுவே முதன் முறையாகும்.

பதவி ஏற்றபோது அவருக்கு 58 வயது. 150 ஆண்டுகளில் மிகக் குறைந்த வயதில் பதவியேற்ற முதல பாப்பரசர் இவர்தான்.

அவர் தன் பதவி காலத்தில், பல சாதனைகள் படைத்தார்.

பாப்பரசரானது முதல் 12 லட்சத்து 137 ஆயிரத்து 584 கிலோ மீற்றர்கள் தூரம் சுற்றுப் பயணம் சென்று இருக்கிறார். இது பூமிக்கும், சந்திரனுக்குமான தொலைவை விட 3 மடங்கு ஆகும்.

98 முறை 129 நாடுகளுக்குச் சென்று இருக்கிறார்.

கடந்த 12 மாதங்களில் 22 லட்சம் மக்களை ரோமில் அவர் சந்தித்து இருக்கின்றார். 1993ஆம் ஆண்டு முதல் நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டு இருந்தபோதிலும் தொடர்ந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்து இருக்கிறார். (ஒ)

# அமெரிக்க விமானங்கள் ஈராக் மீது குண்டுவீச்சு!

வாஷிங்ரன்,ஒக்.17

ஈராக் நாட்டின் சில பகுதிகளில் விமானங்கள் பறக்க ஐநா. தடை விதித்துள்ளது. இந்த பகுதிகளில் அமெரிக்க விமானங்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டன. அப்போது அந்த விமானங்கள்மீது ஈராக் படைகள் ஏவுகணை தாக்குதல் நடத்தின.

இதனால் அமெரிக்க விமானங்கள் நேற்றுமுன்தினம் காலை பாக்தாத் நகரில் இருந்து 120 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள அல்குத் என்ற நகர் மீது குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் ஈராக் இராணுவத்தின் தகவல் தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன. (ஒ)

# ரஜினி உண்ணாவிரதத்தில் பா.ம.கட்சிக்கு சவாலா?

## டாக்டர் ராமதாஸ் கண்டனம்


சென்னை,ஒக்.17

சென்னையில் நடிகர் ரஜினிகாந்த உண்ணாவிரதம் இருந்த மேடை அருகே பாட்டாளி மக்கள் கட்சிக்கு எதிரான வாசகங்கள் இருந்ததாகக் கூறப்படுவது குறித்து அக்கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ராமதாஸ் வெளியிட்ட அறிக்கையில் பா.ம.கவுக்குச் சவால் விடும் வகையில் வாசகம் எழுதியது தன்னுடைய அனுமதியுடன் நடந்ததா அல்லது அதை அவர் விரும்புகிறாரா என்று ரஜினிகாந்த் விளக்கவேண்டும்.

கங்கை காவிரி இணைப்புத் திட்டம் 300 ஆண்டுகளுக்கு நிறைவேறாது என்று தெரிந்துகொண்டு தான் அத்திட்டத்துக்கு ருபா ஒரு கோடி தருவதாக ரஜினி கூறியிருக்கிறார்.


இந்த உண்ணாவிரதத்தின் மூலம தன்னுடைய அடுத்த படத்துக்கு ரஜினி பூஜை போட்டிருக்கிறார்! என்று ராமதாஸ் கூறியுள்ளார். (ஒ)



தமிழகத்துக்கு காவிரி நீரைத் திறந்துவிட கர்நாடக அரசை வலியுறுத்தி நடிகர் ரஜனிகாந்த் சென்னையில் 9 மணிநேரம் உண்ணாவிரதம் இருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

# ரஷ்ய விண்வெளி ரொக்கெட் வீழ்ந்து வெடித்துச் சிதறியது!

## ஒருவர் உயிரிழப்பு; 8பேர் காயம்



'சோயுஸ்-யு' ரக ரொக்கெட்

மொஸ்கோ,ஒக்.17

செயற்கைக்கோளை ஏந்திச் சென்ற ரஷ்ஷியாவின் ஆளற்ற விண்வெளி ரொக்கெட் புறப்பட்ட சிறிது நேரத்திலேயே ஏவுதளத்தில் வெடித்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்தார்; மேலும் எட்டுப் பேர் காயமடைந்தனர்.

தலைநகர் மொஸ்கோவில் இருந்து ஆயிரத்து 200 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள பிளீட்ஸ்க் விண்வெளி மையத்தில் இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

ஐரோப்பிய விண்வெளி நிறுவனம் மற்றும் சில நாடுகளின் விண்வெளி ஆய்வுகளுக்காக 15நாள்கள் பூமியை வலம்வரும் திட்டத்துடன் அனுப்பப்பட்ட 'போடன்' செயற்கைக்கோளை விண்வெளிக்குக் கொண்டு சென்ற 'சோயுஸ்-யு' ரக ரொக்கெட் ஏவப்பட்ட சிறிது நேரத்தில் வெடித்து வீழ்ந்தது. அதன் சிதறல்கள் ஏவுதளத்தில் பரவலாக வீழ்ந்தன.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணைகள் தொடக்கப்பட்டுள்ளன. ஆயினும், இயந்திரக்கோளாறே இதற்கு காரணம் எனக் கருதப்படுகிறது.

கடந்த 11வருடங்களாக சோயுஸ்-யு ரக ரொக்கெட்டுக்கள் விபத்தின்றி சீராகச் செயற்பட்டதாகக் கூறப்படுகிறது.

பிற நாடுகளின் செயற்கைக்கோளை விண்ணுக்குச் செலுத்துவதன் மூலம் ரஷ்யா ஓரளவு பொருளாதாரலாபம் ஈட்டி வருகிறது. இந்த விபத்தையடுத்து அந்த வருமானம் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது. (ஒ)

## கேதாரகௌரி விரத நூல் வெளியீடு

சுழிபுரம்,ஒக்.17

கேதாரகௌரி விரதம் இருப்பவர்களின் பயன்பாட்டுக்கென கேதார கௌரி நூல் வழக்கம்பரை பஜனைச் சபையினரால் வெளியிடப்பட்டுள்ளது. வேண்டியவர்கள் பஜனைச் சபைச் செயலாளருடன் தொடர்புகொண்டு நூலைப் பெற்றுக்கொள்ளலாம். வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய காரியாலயத்திலும் சுழிபுரம் பத்திர காளி அம்பாள் ஆலய காரியாலயத்திலும் நூலைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-28)

## சிறுவர் உதவித் திட்ட ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஒக்.17

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் சிறுவருக்கு உதவும் திட்ட ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். பலநோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சீ.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனனும் -

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.வரதராசா, வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன், யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை பேராசிரியர் சபா. ஜெயராசா ஆகியோரும் - கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வின் இறுதியில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட கல்வி கற்கும் சிறுவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன. (ஒ-9)

## விக்கினேஸ்வராவில் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,ஒக்.17

தொல்புரம் விக்கினேஸ்வரா வித்தியாலய பரிசளிப்புவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் மு.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா மற்றும் இணுவில் மத்திய கல்லூரி ஆசிரியர் திருமதி பானுமதி ஜெயராசா ஆகியோரும் -

சிறப்பு விருந்தினராக, சங்கானை கல்விக்கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.செல்லையாவும் - கலந்துகொள்கின்றனர். (ஒ-9)

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு!

கோப்பாய்,ஒக்.17

உரும்பிராய், ஊரெழுப்பகுதிகளில் சட்டவிரோத மின்பாவனையில் பலர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

தற்போது மழைகாலம் ஆரம்பமாகி உள்ளதால் திருட்டுத்தனமாக மின் இணைப்புக்களை ஏற்படுத்துவோர் ஆங்காங்கே மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்களையடுத்து சட்டவிரோதமாக மின்சாரம் பெறுவோர் பற்றிய தகவல்கள் அம்பலமாகி வருகின்றன.

இது குறித்த பொது அமைப்புகள் எச்சரிக்கை செய்தும் அவை உதாசீனப்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-72)

## பொலநறுவை மாநாட்டில் காரை விவசாயிகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

பொலநறுவையில் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறும் சர்வதேச விவசாயிகள் மாநாட்டில் பங்குபற்ற காரைநகரைச் சேர்ந்த 20 விவசாயிகள் செல்கின்றனர்.

நீர்ப்பாசன, நீர்முகாமைத்துவ அமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேராவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த மாநாட்டில் தெற்கு மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் பங்குபற்றுகின்றனர்.

இந்த மாநாட்டில் பங்குபற்ற விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று 20 விவசாயிகள் காரைநகரில் இருந்து செல்கின்றனர்.

யாழ்.மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் குறித்து இவர்கள் அங்கு எடுத்துக் கூறவிருப்பதாகக் கூறப்பட்டது. (ஒ-3)

# சமாதானச் சூழ்நிலை நீடித்தால் கல்வித்துறை மேம்பட வாய்ப்பு

குடாநாட்டில் கல்வித்துறை நேற்று, இன்று, 'நாளை என்னும் தலைப்பில் எழுதப்போனால் ஒரு புத்தகமே எழுதலாம் - இதில் எவ்வித சந்தேகமுமில்லை.

மிஷனரிமாரின் குடாநாட்டு விஜயத்தினூடாக, கல்வி அக்காலத்தில் உன்னத ஸ்தானத்தில் இருந்தது; அதேபோல இந்து மகாசபையும் கல்வி வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டியது. இருசாராரும், பாரிய பாடசாலைகளைக் குடாநாட்டில் ஆரம்பித்தார்கள். ஆனால், முற்றுமுழுப் பாடங்களும் ஆங்கிலத்தில் போதிக்கப்பட்டன தமிழைத் தவிர. தமிழ்ப் பாடம் ஒன்றுதான் தமிழில் கற்பிக்கப்பட்டது. ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்பொழுது இருசாராரும் அதிக அக்கறையுடனும், ஆர்வத்துடனும், கவனத்துடனும் ஆசிரியர்களின் தகைமைகள், திறமைகள், செயற்பாடுகள், குடும்பப்பின்னணி, சமயம், ஒழுக்கம் என்பவற்றில் அதிக கவனம் செலுத்தியே ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். ஆசிரியர்களும் நான் எதிலும் குறைந்தவனல்லன், சளைத்தவனல்லன், பயந்தவனல்லன் என்ற ஆணவத்துடனும், இறுமாப்புடனும், அதேசயம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுக்கம், நிதானம், நேர்மை, அன்பு, பண்பு எல்லாவற்றையும் ஒன்று கலந்த தேனமுதம்போல் மாணவர்களுக்குக் கற்பித்தார்கள். சிறந்த பெறுபேறுகளையும் மாணவர்கள் பெற அல்லும் பகலும் பாடுபட்டு அதில் வெற்றியும் கண்டார்கள். தவறுசெய்த மாண, மாணவிகளைத் தண்டிக்கவும் தவறுவதில்லை. எந்நேரமும் மேசையில் பிரம்பு. தவறு புரியும் மாணவ, மாணவிகளை உடனுக்குடன் தண்டிப்பார்கள். கேட்பார் யாருமில்லை. மாணவர்களும் இதைப்பற்றிப் பெற்றோரிடம் முறைப்பாடு செய்யமாட்டார்கள். ஏனெனில், அங்கும் வேண்டிக்கட்டவேண்டி நேரிடும். 'பிச்சை வேண்டாம் நாயைப் பிடி' என்ற கதைதான். சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட்திரு.வண. பிதா ரீ.எம்.எவ். லோங் சுவாமி அவர்கள் ஆறு பிரம்படி கொடுத்தால் அனைவரும் பார்த்துக்கொண்டே இருப்பார்கள். ஒரே நிசப்தம் நிலவும். மாணவன் பெற்றோரிடம் முறையிட்டால் அவர்கள் அதில அக்கறை காட்டமாட்டார்கள். தப்பித் தவறி அதிபரிடம் இதைப்பற்றி வந்து கேட்டால் பாடசாலை விலகல் பத்திரம் உடனடியாகப் பெற்றோர் கைகளில் கொடுக்கப்படும். வேறு பாடசாலைகளிலும் அந்தமாணவனைச் சேர்க்கமாட்டார்கள்.

அக்காலகட்டத்தில் வெளிவாரிப் படிப்புக்கள், யூனியர் கேம்பிறிட்ஜ், சீனியர் கேம்பிறிட்ஜ், மற்றிகியூலேடின், பீ.ஏ., எம்.ஏ. போன்ற பரீட்சைகளை இங்கிருந்தே எழுதும் வாய்ப்பிருந்தது. பலர் பரீட்சைகளில் சித்தியடைந்து பெரும் பெரும் பதவிகளை வகித்தமை எல்லோரும் அறிந்த விஷயம். ஒருவர் யூனியர் கேம்பிறிட்ஜ சான்றிதழுடன் மத்திய வங்கியில் உத்தியோகம் பார்த்து யாழ்.மாவட்டத்தில் அதிக ஓய்வூதியத்தை இப்பொழுதும் பெற்றுக்கொண்டிருக்கின்றார்.

அக்காலகட்டத்தில் ஏழைப் பிள்ளைகள் கல்வி கற்றமை குறைவாக இருந்தது. இதற்கு ஒரு காரணம் சாதிக் கொடுமை என்பதையும் சொல்லி வைக்க விரும்புகின்றேன். சிறுபான்மை இனத்தை சேர்ந்த ஒருவரை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்த்தமையால், அக்கிராமத்து மக்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்தார்கள். ஆனால்

### டேவிற் தம்பிராஜா

நடந்தது என்ன? பிக்னல் ஐயா கூறியதாவது:- இந்த ஒரு பிள்ளை மட்டும் இங்கு படித்தால் போதும்.என்று நேருக்கு நேர் எல்லோருக்கும் சொன்னதும், எல்லோரும் அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டபின் தங்கள பிள்ளைகளை மீளவும் பாடசாலைக்கு அனுப்பினார்கள். குறுகிய வசதிகளுடன், சிறந்த சேவைகளை அக்காலத்தில் செயற்படுத்தினார்கள்.

விஞ்ஞானம், பொறியியல், கணக்கு, சட்டம், தொழிற்பயிற்சி, சுகாதார வசதிகள் ,விளையாட்டு, கலை, கலாசாரம், விவசாயம், மீன்பிடி இப்போது உள்ள வசதிகள்போல் இல்லாமல் குறைவாகவே இருந்தன; இருப்பினும் கிடைத்த ஒரு சில வசதிகளைக்கொண்டு முன்னேற்றமடைந்தவர்கள் பலர். ஓர் உதாரணம் தரவேண்டுமானால் சீ.வீ.தாமோதரம்பிள்ளை ஐயா அவர்கள் விண்வெளி சாஸ்திரத்தில் உலகத்திலேயே புகழ்பெற்று விளங்கினார்.

ஒழுக்கத்தைப் பற்றிக் கூறப்போனால், அக்காலத்தில் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் சிறந்த முறையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்தார்கள். ஆனால், இப்போது அதைக் காணமுடியாதுள்ளது; இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் சிலவற்றைக் கூறப்போனால், விரக்தி, பயம், பீதி, ஏக்கம் போன்றவைகளேயாகும். எதிர்காலம் முழுவதும் புரிந்துணர்வு உடன்பாட்டிலேயே தங்கியுள்ளது என்பதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

அரசாங்கத்தின் இலவசக் கல்வித் திட்டத்தால் பல மாணவ, மாணவிகள் பல வகையில் முன்னரிலும் பார்க்கப் பயனடைகிறார்கள். எதிர்காலம் சிறப்பாக அமையவேண்டுமென்று இறைவனை மன்றாடுவோம் - அவர் நல்லதை நினைப்பவர், நல்லதைச் செய்பவர் - அதேபோல் கல்வியா, செல்வமா, வீரமா எனக் கேள்வி எழும்பும்போது கல்விக்கே முதலிடம் கொடுக்கப்படுகிறது. அன்னையைக் கல்விக்கும், தந்தையைச் செல்வத்துக்கும் தெய்வத்தை வீரத்துக்கும் ஒப்பிடுகிறார்கள்.

கல்வியைப் பொறுத்தமட்டில் உடற்கல்வி, சுகாதாரம் முக்கிய இடங்களை வகிக்கின்றன. உடற்கல்வியை நாம் பிரித்துப் பார்க்கிறபோது, அது உடற்பயிற்சி, விளையாட்டு என்று பிரிந்தே வினையாற்றுகிறது.

உடற்பயிற்சியென்பது உடல் உறுப்புக்களை ஒருங்கிணைத்து, செயல்படவைத்து, உடல் அமைப்பில் வலிமையையும், உடல் ஆற்றலில் சிறப்பான தன்மைகளையும் கொழிக்க வைக்கிறது.

விளையாட்டு என்பது, பங்குபெறுகிற ஒவ்வொருவரும் தனக்குரிய திறமைகளைத் தெரிந்துகொள்ளவும், மற்றவர்களது திறமைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் திருப்திபட்டுக்கொள்ளவும், அதையே போட்டியிட்டு விளையாடிப் பொழுதை பயனுள்ளதாகப் போக்கவும், பயன்

## குடாநாட்டின் கல்வித்துறை நேற்று - இன்று - நாளை

களைச் சேர்க்கவும், மகிழ்ச்சியில் திளைக்கவும் செய்துவிடுகிறது.

குழந்தைகள், இளைஞர்கள் நல்வாழ்விற்கும், நல்ல தோற்றத்திற்கும் உதவுவன உடற்பயிற்சிகளும் விளையாட்டுக்களுமாகும். உடலைத் திறமாக்கி, மனதைப் பண்படுத்தி, மூளையை வளம் நிறைந்ததாக மாற்றி விடுவதால், பொதுக்கல்வி அறிவில், அன்றும் இன்றும் என்றும் பெருமை பெறுகிற அளவு முன்னேற்றத்தையும் அளித்துவிடுகின்றன. மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகளையே விளையாட்டுக்கள் வழங்குவதால், அவர்கள் வாழ்நாள்கள் வற்றாத இன்பச் சுவையாகவே மாறிவிடுகின்றன. இத்தகைய பேருண்மைகளைப் புரிந்துகொண்டு ஆசிரியப் பெருமக்களும, பெற்றோர்களும், அன்றும், இன்றும், என்றும் தங்கள் காலங்களை கல்வியோடு இணைந்த விளையாட்டுத்துறையிலும் அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருகிறார்கள்.

தன்னுடல் சுகாதாரம் எனப்படுவது ஒருவரின் உடலுக்குரிய நலம் பற்றி விளக்குவதுதான். தினந்தோறும பல் விளக்குதல், மலம்கழித்தல், குளித்தல், தலைக்கு எண்ணெயிட்டு, முடிவாருதல், வளர்ந்துவரும் நகங்களை வெட்டி அழகுபடுத்துதல், கைகால்களின் அழுக்குகளைக் கழுவித தூய்மையாய் வைத்திருத்தல் போன்றவை எல்லாம் தன்னுடல் சுகாதாரப் பழக்கங்களாகும். உணவு உண்ணுதல், தண்ணீர் குடித்தல், தேகப்பயிற்சி, ஓய்வு, உல்லாசமான பொழுதுபோக்கு, உறக்கம், கைகால், உடல் தூய்மை இவற்றின் சிறப்புகளை, இன்றுநேற்றல்ல, ஆதிகாலம் தொட்டே பாடசாலைகளில் கற்பித்திருக்கிறார்கள். இப்பொழுது பல ஆய்வுகள் ஆராய்ச்சிகளுடாக சுகாதார முறையைச் சிறப்பாகவும் செழிப்பாகவும் கல்வித் துறையினர் பேணிக்காத்து வருகின்றனர். எதிர்காலமும் மிகவும் சிறப்பாகத் திகழுமென்பதில் எதுவித ஐயமுமில்லை. ஆனால், இவையெல்லாவற்றிக்கும், நாட்டுநிலைமை, சூழ்நிலை, ஒத்துழைப்பு, அன்புப்பரிமாற்றம் நல்லபடியாக அமைதல்வேண்டும். நடந்தவைகள் நடந்தவைகளாகவே இருக்கட்டும். இனி நடப்பவைகள் நல்லவைகளாகவே இருக்கட்டும், அமையட்டும்.

இனிவரும் காலம் கல்விச்செயற்பாட்டில் அதி உன்னத ஸ்தானத்தை வளர்த்து, வலிமைமிக்க சமுதாயத்தை உருவாக்கவும், அறிவைப் பெருக்கவும், திறனை வளர்க்கவும், இன்றைய குழந்தைகளே நாளைய மனிதர்கள், நாளையதலைவர்களாக வரவேண்டும், கல்வி மேம்பட்டு வளர வேண்டும் என்று இறைவனை வேண்டி நிற்போம். ★


### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில்
(13-10-2002) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற
பட்டமளிப்பு விழாவில் Dip. in Ed. பட்டம்பெற்ற
எமது அன்புக்குரிய ஆசிரியர்
**திரு.சின்னையா நித்தியானந்தராஜா**
(B.B.A. - யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்)
அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய நண்பர்கள்:
ஸ்ரீஸ், பிரதீஸ்,
கஜேந்திரன், குகன்.

*திருநெல்வேலி.* (9542)



### பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண்கலைப்பீட
மாணவனும், மிருதங்க ஆசிரியரும் இணுவை மணி
பெற்றெடுத்த கலைப் புதல்வனுமாகிய
**செல்வன் கே.கஜன்**
அவர்கள் 13-10-2002 இல் நடைபெற்ற யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் நுண்கலைமாணி (மிருதங்கம் சிறப்பு B.F.A. Miruthangam Spl.) பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமையையிட்டு அவரை மிக மகிழ்ச்சியோடு பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர் மேலும் பல சிறப்புக்கள் பெற்று கலைச்சேவை புரியவேண்டுமென்று, எல்லாம்வல்ல ஆண்டவனைப் பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

மாணவர்கள்:
சி.சபேசன், சி.சரவணன்,
ம.இராகவன்.

*சுதுமலை,*
*மானிப்பாய்.* (9544)



### உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்

## பாராட்டுவிழா

பாராட்டுப் பெறுபவர்கள்





திருமதி ஸ்ரீரங்கநாயகி பவானந்தன் — திருமதி அன்னலட்சுமி சீவரத்தினம்

காலம்: இன்று (17.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணி
இடம்: பொன்னுத்துரை அரங்கு - உ.சை.த.வித்தியாலயம்
தலைவர்: திரு.க.யோகராசா அவர்கள் (முதல்வர் உ.சை.த.வி.)

உரும்பிராய் கற்பக விநாயகர் கோவிலில் ஆரம்ப நிகழ்வாக இறை வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து பாராட்டுப் பெறுபவர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

அறிஞர்கள் பலர் பாராட்டுரை வழங்குவார்கள். பாராட்டுக்குரிய இரு ஆசிரியைகளும் ஆசிரிய சேவையின் பயனாகப் பொற்பதக்கம் சூட்டிக் கௌரவிக்கப்படுவார்கள்.

விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக:-

*யாழ்.நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக்குழுவினர் வழங்கும்*
*"ஸ்ரீ வள்ளி திருமணம்" வில்லுப்பாட்டு இடம்பெறும்.*

ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், ரசிகர்கள் அனைவரையும் இப்பாராட்டு வைபத்தில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவத்தமிழ் வித்தியாலயம், உரும்பிராய். (9545) - பாடசாலைச் சமூகம்.

உதயன்

# கட்டுநாயக்காவில் செங்கம்பள வரவேற்பு!

"கட்டுநாயக்கா விமானத் தளத்தின்மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தி, இலங்கையின் பொருளாதாரத்தைத் துவம்சம் செய்தவர்கள் விடுதலைப் புலிகள். அவர்களின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்திற்கு கட்டுநாயக்கா விமானத் தளத்தில் செங்கம்பள வரவேற்பளித்திருக்கின்றது அரசு. நாட்டுக்கும், சிங்கள மக்களுக்கும் பெரும் வெட்கக்கேட்டைத் தரும் செயல் இது."

- இப்படி முழங்கியிருக்கின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ.

கட்டுநாயக்கா விமானத் தளம்மீது தாக்குதல் நடத்தியவர்கள் புலிகளே என்பது ஊர் அறிந்த இரகசியம்.

அந்தத் தாக்குதலினால் இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குள் வீழ்ந்தது என்பதும் உண்மையே.

பொதுமக்களுக்கு உயிர் இழப்போ, உடல் ஊனமோ ஏற்படாமல் தமது தாக்குதலை - உரிய கட்டளைக்கு அமைய - நேர்த்தியாக நடத்தி முடித்து, தமது உயிரையும் தற்கொடை வழங்கிய, புலிகளின் அணி அப்போது விதந்து பாராட்டப்பட்டது.

'சமாதானத்துக்கான யுத்தம்' என்ற போலி வேடம் தரித்துக்கொண்டு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசு நடத்திய நாடகத்தின் தாற்பரியத்தை சர்வதேச சமூகத்துக்கு அம்பலப்படுத்தியது இந்தத் தாக்குதல்தான்.

ஜனாதிபதி குமாரதுங்கவும் அவரது அரசியல் தளபதிகளும் நடத்திய யுத்தத்தின் தகைமையை இலங்கை மக்களுக்குத் துலாம்பரமாக எடுத்துக் காட்டியதும் இந்தத் தாக்குதல்தான்.

சமாதானத்துக்கான கதவுகளைத் திறந்து வைத்துக்கொண்டு, அமைதிப் பேச்சுக்களுக்குப் புலிகள் தொடர்ந்து விடுத்துக்கொண்டிருந்த அழைப்பை சந்திரிகா அரசு நிராகரித்து வந்தது. தமது அரசில் யுத்தத்தை வியாபாரமாக நடத்தியவர்களின் கருத்துக்குத் தலைவணங்கிக்கொண்டிருந்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

சமாதான வேட்கையோடு - அமைதி விருப்பத்தோடு - புலிகள் நீட்டிய நட்புறவுக் கரத்தைப் பற்றியே ஆகவேண்டும் என்பதை இலங்கை அரசுக்கு உறைப்புடன் உணர்த்தியதும் இந்தக் கட்டுநாயக்கா தாக்குதல்தான்.

நாட்டின் பொருளாதாரத்தையே துவம்சம் செய்த கட்டுநாயக்காத் தாக்குதலை போற்றுவது அல்ல நமது நோக்கம்.

இலங்கையின் அமைதிக்கான நீண்ட முயற்சியில் அத்தாக்குதல் ஏற்படுத்திய தாக்கத்தின் தாற்பரியத்தை வெளிப்படுத்துவதே நமது எண்ணம்.

தற்போதைய அமைதி நிலைக்கும், சமாதான முயற்சிகளின் நீடிப்புக்கும் வழிசெய்த திருப்புமுனையாகக் கட்டுநாயக்காத் தாக்குதலே அமைந்தது.

யுத்தத்தின் பேரால் தமிழர்களை மட்டும் முட்டாள்களாக்க முடியாது; தாமும் முட்டாள்களாக வேண்டிவரும் என்பது போர் வெறிபிடித்த பேரினவாதக் கும்பலுக்கு இத்தாக்குதல் மூலமே புகட்டப்பட்டது.

ஒட்டுமொத்தத்தில் இன்றைய அமைதிக்கு வழிவகுத்தது கட்டுநாயக்காத் தாக்குதல்.

இப்போது சமாதான முயற்சியில் ஈடுபட்டிருக்கும் புலிகளின் அணியில் உள்ள மூத்த தலைவர் அன்ரன் பாலசிங்கம்.

அமைதிக்கு வழிசெய்த இடத்தில் சமாதான முயற்சிக்குத் தலைமை தாங்கும் அன்ரன் பாலசிங்கத்துக்கு, செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டிருந்தால், அது வரவேற்கத்தக்கதுதானே? பொருத்தமானதுதானே?

தமிழர்களுக்கு உரிய உரிமை வழங்குவது, அவர்களுக்கு உரிய கௌரவத்தை அளிப்பது போன்றவை பேரினவாத சக்திகளான ஜே.வி.பி. போன்றவற்றுக்கு வேம்பாய்க் கசக்கும் விடயங்கள்.

எனவே, அன்ரன் பாலசிங்கத்துக்கும் அவரது துணைவியாருக்கும் கட்டுநாயக்காவில் வழங்கப்பட்ட பாதுகாப்பு, வரவேற்பு என்பன அவர்களுக்குப் பிடிக்காமல் போனதில் வியப்பேதுமில்லை.

ஆனால், அத்தகைய நடவடிக்கை தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு மேலும் உயிர்ப்பூட்டி இருக்கின்றது என்பதை மட்டும் அறுதியிட்டுக் கூறலாம்.

### தெற்கு சிறைகளில் உள்ள

# தமிழ்க் கைதிகளின் வழக்குகள் யாழ்.நீதிமன்றங்களுக்கு மாற்றம்

## சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் வடக்கில் கைதுசெய்யப்பட்டு தெற்குப் பகுதிச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மீதான வழங்குகளை யாழ்ப்பாண நீதிமன்றங்களுக்கு மாற்றுவதென சட்டமா அதிபர் திணைக்களம் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய கைதிகள் தத்தமது சட்டத்தரணிகள்மூலம் தமது வழக்குகளை யாழ்ப்பாணத்திற்கு மாற்றுவதற்கு கோரிக்கை விடுக்கலாம். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதான 222 கைதிகள் தெற்குச் சிறைகளில் உள்ளனர். அவர்களில் 139 பேர் களுத்துறை சிறையில் உள்ளனர்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் தற்போதைய தீர்மானத்தால் தெற்கிலுள்ள சிறைச்சாலைகளில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி தவிர்க்கப்பட வழி ஏற்படுகிறது. கைதிகள் தமது சொந்த இடங்களுக்கு மாற்றப்படுவதால் அவர்களுக்கும் மன ஆறுதல் ஏற்படும் எனவும் மேற்படி திணைக்கள் வட்டாரங்கள் தெரிவித்தன.

தெற்குச் சிறைகளில் உள்ள தமிழ்க் கைதிகள் விசாரணைகளுக்காக தற்போது தென்பகுதி நீதிமன்றங்களுக்கே கூட்டிச் செல்லவேண்டியுள்ளதால், அவர்களுக்குப் பெருஞ்சிரமமும் ஏற்படுகிறது. அத்தோடு அவர்கள் குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டுத் தொலைவில் உள்ளதால் மன உளைச்சலுக்கு உள்ளாகின்றார்கள். மேலும் அவர்களது குடும்பத்தவர்கள் அவர்களைச் சந்திக்க வருவதற்கு பிரயாணச் செலவுக்கே கஷ்டப்படும் நிலையில் உள்ளனர். இவையனைத்தும் புதிய தீர்மானத்தால் முடிவுக்குவரும் என்று நம்பப்படுகின்றது.

இதேவேளை -

இந்தப் புதிய வரவேற்கத்தக்க தீர்மானத்தை இக்கைதிகளின் சார்பில் நீதிமன்றில் ஆஜராகும் சட்டத்தரணிகள் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது. கைதிகளுக்காக நீதிமன்றில் ஆஜராகுவதற்கு இவர்களில் பலருக்கு வெளிநாடுகளிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவித்தொகை வழங்கிவருகின்றன. இந்த நிலையில் மேற்படி வழக்குகளுக்காக வடக்குக்கு வந்துசெல்ல விரும்பாத சட்டத்தரணிகளே சட்டமா அதிபர் திணைக்களத்தின் தீர்மானத்தை விரும்பவில்லை என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவிக்கின்றது. (ஒ)

# தச்சனார் மருதமடு முகாமிலிருந்து அகதிகள் பலாத்கார வெளியேற்றம்!

## மரங்களின்கீழ் தங்கும் அவலம்

கிளிநொச்சி,ஒக்.17

வவுனியா வடக்கு உதவி அரச அதிபர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து தச்சனார் மருதமடு திறந்தவெளி அகதி முகாமில் தங்கியிருந்த அகதிகள் அங்கு இருந்து பலாத்காரமாக வெளியேற்றப்பட்டு வருவதாகவும் -

அவ்வாறு வெளியேற்றப்பட்ட பல குடும்பங்கள் வவுனியா வடக்கில் மரங்களுக்குக்கீழ் பெரும் சிரமங்களுடன் வாழ நேரிட்டுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

1990ஆம் ஆண்டு வவுனியா வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் தட்சனார் மருதமடு திறந்தவெளி அகதிமுகாமில் தங்கியிருந்தன.

தற்சமயம் ஏற்பட்டுள்ள சுமுக நிலையை அடுத்து அங்கிருந்த அகதிகளில் 2ஆயிரத்து 910 குடும்பங்கள் வவுனியா வடக்கில் உள்ள தமது இருப்பிடங்களுக்குத் திரும்பி கொட்டில்களைப் போட்டுத் தங்கியுள்ளன.

வவுனியா வடக்கில் வீடுகள் முற்றாக அழிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள் மீளக்குடியமர முடியாத நிலையில் உள்ளன. அவர்களுக்கு அரசோ, பொது நிறுவனங்களோ எந்த உதவியும் வழங்காததால், அவர்களால் மீளக் குடியமரமுடியாதநிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இத்தகைய நிலையில் உள்ள 47 குடும்பங்கள் மடு உதவி அரச அதிபரின் பணிப்பின் பேரில் முகாமில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளன.

வாகனங்கள்மூலம் வவுனியா வடக்குப் பகுதியில் கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ள அக்குடும்பங்கள் வீடு அமைக்க முடியாத நிலையில் மரங்களுக்கு கீழ் தங்கியுள்ளன.

வவுனியா வடக்கில் மீளக் குடியமர்ந்துள்ள எவருக்கும் இதுவரை எந்தவிதக் கொடுப்பனவும் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

# பெற்றோலியப் பொருள்களுக்கு குடாநாட்டிலும் விலை ஏற்றம்!

அரியாலை,ஒக்.17

யாழ்.குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனவு நிலையங்களிலும் நேற்றுக்காலைமுதல் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் 25ரூபா 05 சதத்திலிருந்து 27 ரூபா 05 சதமாகவும், டீசல் 36 ரூபா 85 சதத்திலிருந்து 38 ரூபா 35 சதமாகவும், பெற்றோல் 58ரூபாவிலிருந்து 59 ரூபா 50 சதமாகவும் விலை உயர்த்தப்பட்டுள்ளன.

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி தெரியவந்ததுமே நேற்று காலை எரிபொருள் விற்பனை நிலையங்களில் இருப்பெடுக்கப்பட்டு விலை உடனடியாக அதிகரித்து விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் எரிபொருள்களின் விலையை அதிகரித்துவரும் சமயத்தில் மண்ணெண்ணெயைத் திடீரென இரண்டு ரூபாவால் அதிகரித்திருப்பது ஏழை மக்களைப் பெரிதும் பாதிக்கும் ஒரு செயல் என்று மக்கள் பலரும் விசனம் தெரிவித்தனர். (ஒ-17)

### கிழக்குப் பிரதேசத்தில்

# நிலைமை சீராகும்வரை போராட்டம் வேண்டாம்!

## கண்காணிப்புக்குழு வேண்டுகோள்

கொழும்பு,ஒக்.17

கிழக்கில் பதற்றநிலைமை சீராகும்வரை அங்கு ஆர்ப்பாட்டப் பேரணிகளையோ, எதிர்ப்புப் போராட்டங்களையோ நடத்த வேண்டாம் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்றுமுன்தினம் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவைச் சந்தித்துப் பேசிய பின்னர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை நிலைவரங்களைப் பார்வையிட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர், பாதுகாப்பு அமைச்சரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

முப்படைகள் மற்றும் விடுதலைப் புலிகள் இடையே புரிந்துணர்வு வளர்க்கப்படவேண்டும் எனவும் -

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அதுவே மிகச் சிறந்தவழி எனவும் -

போர்நிறுத்தக் காண்காணிப்புக் குழுத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஓ-12)

### யாழ். பண்ணைப் பகுதியில்

# சிறைக் கட்டடம் அமைக்கும் முதற்கட்டப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.சிறைச்சாலைக் கட்டடத்தைப் பண்ணைப் பகுதியில் அமைப்பதற்கான முதற்கட்ட நடவடிக்கையாக அப்பகுதியில், யுத்தகாலத்தில் புதைக்கப்பட்ட வெடிபொருள்களை அகற்றும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை தலைமையகம் மற்றும் உள்துறை அமைச்சு ஆகியன கேட்டுக்கொண்டதையடுத்து இலங்கை இராணுவம் இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

மிதிவெடி அகற்றும் பணி முடிவடைந்ததும் விரைவில் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக, யாழ்.சிறைச்சாலை ஆணையாளர் செ.சிவசுந்தரம் தெரிவித்தார். (ஒ-9)

### நாளை

ஐப்பசி 01
வெள்ளிக்கிழமை
(18.10.2002)
திதி : துவாதசி
காலை 7.24 வரை.
நட்சத்திரம்: பூரட்டாதி
பின்னிரவு 1.19 வரை.
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 6.02 - 7.32
ராகுகாலம் : 10.32 - 12.02
(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

உங்களுக்கு நேரமிருந்தால் காலத்துக்காகக் காத்திருக்க வேண்டிய அவசியம் இருக்காது.

# பாடசாலை அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்.கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஐந்து பாடசாலைகளில் உள்ள அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுச் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக, யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளில் ஆசிரியர் சேவை வகுப்பு I இல் பணிபுரியும் ஆசிரியர்களிடமிருந்தே இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், கோப்பாய் வடக்கு றோ.க.த.க.பாடசாலை, கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயம், கதிரிப்பாய் சுப்பிரமணியம் வித்தியாலயம், அச்செழு மெ.மி.த.க.பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கான அதிபர் பதவிகளுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த அதிபர் நியமனங்கள் எதிர்வரும் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ளதாகவும் -

தகுதியுடைய ஆசிரியர்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, யாழ்.கல்வி வலயத்துக்கு அனுப்பி வைக்கவேண்டுமெனவும் -

யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஒ-9)

# குடாநாட்டில் அரும்பொருள்கள் கடத்தப்படுவதை 'தடை' மூலம் மட்டும் தடுத்திடல் சாத்திய

எமது பிரதேசத்தின் வரலாறு என்பது காலா காலமாக இங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வனுபவங்களின் வரலாறு ஆகும். இப்பிரதேச மக்கள் பரம்பரைபரம்பரையாக பல்வேறு செல்வாக்குகளை உள்வாங்கி ஒரு சுதேச பண்பாட்டை அவர்கள் வாழ்ந்த காலங்களுக்கமைய கட்டியமைத்து வந்துள்ளனர். இச்சுதேச பண்பாடு முற்பட்ட மரபுகளினதும், புறச் செல்வாக்குகளின் ஊடாட்டத்தினாலும் கட்டியமைக்கப்பட்டு வந்துள்ளது. இப்பண்பாட்டின் வரலாற்றுச் சான்றுகளாக இப்பிரதேசத்தில் வாழ்ந்த, வாழ்கின்ற இனத்தவரின் நாகரிக அளவு கோல்களாக இவர்கள் பயன்படுத்திய பொருள்கள், வாழ்ந்த கட்டடங்கள், வழிபட்ட தலங்கள் முதலிய அனைத்தும் அமைகின்றன. இப்பொருள்களும், இடங்களும் எம்முன்னோர் எவ்வாறனதொரு வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்னும் கதைகளையும் தமக்குள் உள்ளடக்கியுள்ளன. எழுத்திலும், செவி வழியாகவும் சொல்லிக்கொள்ளும் வரலாற்றுக்கு அர்த்தத்தையும், நம்பகத்தன்மையையும் வழங்கும் சான்றுகளாக அமைபவை இவைகளே. எமக்குக்கிட்டிய வரலாற்றை நிறுவ எஞ்சியுள்ள எச்சங்களும் இவைகளே. இவற்றைக் கைவிடுவது என்பது எம்மைப் பண்பாட்டுப் பாரம்பரியமற்ற - நாகரிகமற்ற - கூட்டத்தினர் எனக் கூறமுற்படும் எவருக்கும் நாமே வழிசமைத்துக் கொடுப்பதாக அமையும்.

பண்பாடு என்பது கருத்துருவ நிலைப்பட்டது (விழுமியங்கள், உயர் வழக்குகள், ஆத்மார்த்த நம்பிக்கைகள், சமூகப் பெறுமானங்கள்) பௌதிக நிலைப்பட்டது



பட்சியலங்காரமுடைய பதக்கங்கள்

என இரு நிலைகளில் விளக்கப்படுகிறது. குறித்த மக்கள் கூட்டம் தமது சமூக வரலாற்று வளர்ச்சியூடாகத் தோற்றுவித்துக்கொண்ட பொருள்கள் பௌதிக நிலைப்பட்ட பொருள் பண்பாடாக அமைகிறது. இதனால் குறித்த பிரதேசத்தின், இனத்தின் பண்பாட்டை அறிதல், அளவிடல் என்பதற்கு இவை அவசியமாக உள்ளன.

இப்பொருள்கள் குறிப்பிட்ட பண்பாட்டில் அதற்கென்ற பொருளையும் (Meaning), பயன்பாட்டையும் நிலையாகக் கொண்டு அப்பண்பாட்டில் நிலைபெற்றிருக்கும். தேவைக்கமைய உருவாக்கப்பட்டதால் பண்பாட்டில் அத்தேவை நிலைபெற்றுள்ளவரை இருப்புச் செய்யும். பண்பாட்டு மாற்றம் தேவைகளை இல்லாமல் செய்யும் பொழுது இவை முன்புகொண்ட பொருளை இழந்துகொள்கிறது என்பர். ஆனால், வேறுவிதமான பண்பாட்டியல் அர்த்தத்தை இவை பெற்றுக்கொள்கின்றன.

எழுத்தாளர் யேசுராசா இப்பொருள்களின் பயன்பாடு, பயன்பாட்டின்மைக்கு அப்பால் உணர்வு நிலை சார்ந்த சந்தர்ப்பங்களில் இவை பாதுகாக்கப்படுவதாகக் கூறினார். அதாவது, இப்பொருள்கள் பற்றிய நினைவுகள் குடும்பங்களுக்குள், உறவு நிலைகளுக்குள் உணர்வு நிலை சார்ந்ததாக - பெருமைப்பட்டுக் கொள்ளத்தக்கவைகளாக - அமையும் சந்தர்ப்பங்களில் கைவிடப்படாத நிலையும் காணப்படுகிறது என்றார். இந்த உணர்வு குடும்பங்களுக்குள் வரவேண்டும். அடுத்த கட்டத்தில் சமுதாய ரீதியில் பரந்துபட்டதாகவும் மாறவேண்டும். அதாவது ஒன்றில் அப்பாவின், அம்மாவின் பரம்பரையை ஞாபகமாகவும் அடுத்து சமூகத்தின் வரலாற்று ஞாபகமாகவும் அமையவேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேநேரம், பழம்பொருள்களாகக் கொள்ளப்படும் அரும்பொருள்களை வாழ்க்கைமுறை மாற்றத்துக்கமைய தேவை மாற்றத்துக்கு அமைய வேறு தேவைக்குப் பயன்படுபொருளாக்குவதன் வழியாக இவற்றினை



பித்தளை வேலைப்பாடுடைய சங்கு

மீள இப்பண்பாட்டில் நிலைத்திருக்க வைக்கமுடியும். நாம் இன்று நாகரிகமற்றவை, பழங்காலத்தவை எனக் கைவிடும் இப்பொருள்கள் நகர மக்களின் நாகரிகமான மீளப் பழக்கத்திற்கு வந்துள்ளன என்பதையும் நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஒன்றில் வீடுகளுக்குள் எம் வாழ்தலுடன் ஞாபகமாக - பிரயோசனமாக - ரசனையுடன் இணைத்துக்கொள்ளவேண்டும். அல்லது நிறுவனமயப்பட்ட பொது இடங்களுக்குள் (கட்டடங்களுக்குள்) ஏதோ ஒரு வகையில் இணைத்துக்கொள்ளப்படவேண்டும். அல்லது அரும்பொருள்கள், வரலாற்றுச் சின்னங்கள் எனப் பாதுகாக்கப்பட வேண்டும். இதனை ஒவ்வொரு நாடுகளும் நாடுகளுக்குள் பிரதேசங்களும் கட்டாயமாகச் செய்துள்ளதை பொதுவாக நாம் காணலாம்.

இவ்விடத்தில் எமது பிரதேசத்திலும ஓர் அரும்பொருளகம் (Musium) உண்டு என்பதனை நினைவுபடுத்திக் கூறவேண்டிய நிலையேயுள்ளது. இங்கு கடந்த 20 வருடங்களாக அரசியல் நிலைமை காரணம் காட்டப்பட்டு அகழ்வாராய்வுகள், அரும்பொருள்களை இங்கு விற்பவர்களிடமிருந்து விலைகொடுத்து வாங்குதல், இருக்கும் பொருள்களுக்கான தகுந்த பராமரிப்பு, காட்சிப்படுத்தல் என்பனவின்றி நாட்டின் ஏனைய அரும் பொருளகங்களைப் போலல்லாது இடத்தாலும் நிலைமையாலும் ஒதுக்கப்பட்டுள்ளது.



குதிரைச் சிற்பங்கள்

எவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மருத்துவ கற்கை நெறிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை அவசியமோ, அதேபோன்றதொரு விலக்கமுடியா அவசியமாகவே வரலாறு, கலை, பண்பாட்டுக் கற்கைநெறிகளுக்கு அரும்பொருளகம் அமைகிறது.

கலாசார அமைச்சர், அரசாங்க அதிபர், பல்கலைக்கழகம், நாட்டுக்காகப் பாடுபடுபவர்கள் என பொறுப்பு வாய்ந்த அனைவரும் இதனைக் கவனத்தில் எடுக்க வேண்டுமென்பது அரும்பொருளகத்தில் கடமையாற்றுபவர்களின் எதிர்பார்ப்பாகும்.

இவ்விடயம் பற்றி கலாசார உத்தியோகத்தர் ஒருவர் குறிப்பிடும்போது, கலாசார உத்தியோகத்தர்களுக்கான வேலைத்திட்டத்தில் அந்தந்தப் பிரதேசத்தில் உள்ள அரும்பொருள் சேகரிப்பு என்பதும் உள்ளடங்குகிறது. ஆனால், இவற்றுக்கான இடவசதி, நிதி ஒதுக்கீடு என்பன செய்யப்படாத நிலையில் அடுத்த கட்டத்திற்கு நகரமுடியாதநிலையில் இச்சேகரிப்பு என்பது உள்ளதென்று கூறினார்.

இந்த அரும்பொருள்களை இழந்தால் வருங்காலத்



கதவலங்காரம்

தில் எமது வரலாற்றை, பண்பாட்டுப்பேற்றை (Heritage) நிறுவுவதற்கோ, வருங்கால சமுதாயத்துக்கு எமது மூதாதையர் தந்தவை எனக் கொடுப்பதற்கோ ஒன்றுமே இருக்காது எனக்கூறும் யாழ்.செயலக மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம், இந்த அரும்பொருள் வெளியேற்றத்தைத் தாம் கண்டிப்பதாகவும் மேலும் தற்போதைய நாட்டு நிலைமையில் இந்நடவடிக்கையை நடைமுறையில் தடுக்க விடுதலைப்புலிகளாலேயே முடியும் எனவும் அதுவே அதிகம் நடைமுறைக்குச் சாத்தியமானது என்றும் கலை, கலாசாரம் பேணல் என்பதனுள் இவ்விடயம் மிக முக்கியமானது என்றும் கூறினார்.

மேலும் செயலகத்துக்கு முன்னுள்ள ஆங்கிலேய ஆட்சிக்கால கட்டடம் இடிக்கப்பட இருந்தது. ஆனால், தொல்பொருள் ஆய்வு சம்பந்தமாக தடைசெய்யப்பட்டுள்ளது. இதேபோன்றதொரு முக்கியத்துவமே இந்த அரும்பொருள்களுக்கும் வழங்கப்படவேண்டும் எனக் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது.

இவற்றை நாம் இன்றுதான் இழக்கிறோம் என்பதல்ல. வரலாற்றில் யாழ்ப்பாண குடாநாட்டின் புவியியல் அமைவிடம் காரணமாக படையெடுப்புகள், அந்நிய ஆட்சிகள், வர்த்தக, அரசியல் போக்குவரத்து இடைநிலமாக அமைதல் என்பவற்றால் திட்டமிட்ட கலாசார அழிப்பு, கொள்ளை, வியாபாரநோக்கு எனப் பல வழிகளிலும் நாம் இவற்றை இழந்துள்ளோம். இது மட்டும்தான் இதற்குக் காரணமல்ல. முக்கியமாக வரலாறு பற்றிய, பண்பாடு பற்றிய எமது பார்வையின் அறியாமையும், அசமந்தப்போக்கும் கூட இதற்கு முக்கிய காரணமாகும்.

அ.யேசுராசா, வரலாறு, பண்பாடு பற்றிய எமது பார்வை பற்றிக் குறிப்பிடும்போது ஒப்பீட்டளவில் வரலாற்றுணர்வு எம்மத்தியில் மிகவும் குறைவு. தென்னிலங்கையில் இவ்வரலாறு பேணும் பண்பு சிறப்பாக உள்ளதென்றும் பழமைமிக்க இடங்கள் முதல் - தொல்பொருள்கள், அரும்பொருள்கள் பேணுதலாக இவை மிகவும் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதை ஒரே நாட்டில் வாழும் நாம் கவனிக்கவேண்டியது மிக அவசியம் ஆகும். ஏற்கனவே பௌத்த சிங்கள வரலாற்றுக்கான எச்சங்கள் ஒப்பீட்டளவில் அதிகமாகவும் காலங்கள் வரையறுக்கப்பட்டு காலத்தால் முந்தியவைகளாகவும், முன்னெடுக்கப்பட்ட நிலையிலும் புதிது புதிதாக மீள் உருவாக்கங்கள் புனருத்தாரனங்கள் செய்துகொண்டு வரும் நிலையில் எமது எச்சொச்ச வரலாற்றையும் நாம் இழந்துகொண்டு வருகின்றோம். இவ்வாறானதொரு நெருக்கடி நிலையில் இத்தகைய வரலாறு, பண்பாடு, கலைகள் என்பவற்றைப் பேணுதல் பற்றிய பிரக்ஞை சிறுவயது முதல் அடிமட்ட நிறுவனங்கள்வரை ஏற்படுத்தப்பட வேண்டும் என அவர் கூறியதை கவனத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகும்.

மேலும், தேசிய இனம் பற்றிய அடையாளம் தனியே அரசியல் சார்ந்தது மட்டுமாக அன்றி அனைத்து விடயங்களும் அடங்கியதாக அமையவேண்டும் எனக்கூறும் ஓவியர் மு.கனகசபை, தமிழினம் இங்கு எவ்வாறு வாழ்ந்தது என்பதை நிறுவ ஆதாரங்கள் குறைவாக உள்ள நிலையில் கலாசாரத்தை எடுத்துக்காட்டும் பொருள்கள் எவை என்பதை சரியாக இனங்கண்டு அவை சரியாக நோக்கப்படவேண்டும் எனக் குறிப்பிடுவது முக்கியமானது.

ஒரு பண்பாட்டுக்கான மதிப்பு என்பது அப்பண்பாடு தோற்றுவித்துக்கொண்ட கலை வெளிப்பாடுகள் மூலமாக நோக்கப்படுவதாகும். இங்கு, தேசியங்கள் அவை எவற்றை உள்வாங்கிக் கொண்டன என்பதை மட்டுமல்லாது மனித நாகரிகத்துக்கு எதைப் பங்களித்தன என்பதையும் கொண்டே கணிப்பிடப்படுகின்றன. எமது மூதாதையர் நாகரிகமான வாழ்க்கைக்கு செல்வாக்குகளின் தன்வயப்படுத்தல்மூலம் உருவாக்கிய சுதேசிய பண்பாட்டுப்பொருள்கள் மூலமே எமது சமூகமும் இனமும் கணிப்பிடப்படும் என்பது இதனடியாகத் தெரிகிறது.

நாமும் தொன்மைப்பொருள்களைப் பேணுவது என்பதை வெறும் பழமை பேணும் ஒரு பண்பாட்டு வழிமுறையாக அல்லாது தொன்மையான வாழ்வுகளின் வேரைப் பேணுவதாக அமையவேண்டும் எனவும் எமது அடையாளங்களை வீடுகளில் தொலைத்துவிட்டதாலேயே இன்று நிலத்தடியில் தேடும் நிலையில் உள்ளோம் எனக் கூறும் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை பழையன கழிதல் நடைமுறை என்பதற்காக எமது பண்பாட்டின் வேரை அறுத்துக்கொள்ளமுடியாது என்றும் - ஏ- 9 பாதையினூடாக ஒரு சிறிய அரும்பொருள்கூட எடுத்துச்செல்ல முடியாதவாறு தடை நடவடிக்கை புலிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

தி.சிவாஜினி

இந்த அரும்பொருள்களின் வெளியேற்றம் மீதான புலிகளின் தடை குறித்து அ.யேசுராசா கருத்துத் தெரிவிக்கும்போது இத்தடை கருத்து ரீதியில் ஏற்கக் கூடியது. ஏனெனில், இவ்விடயத்தில் செல்வாக்குமிக்க நிறுவனமாகவும் இதனைச் செய்யவேண்டிய நிறுவனமாகவும் இவர்களே உள்ளனர் என்றும், ஆனால் தடை என்பது வெறுமனே போடப்பட்டதாக அன்றி செயற்பாட்டு ரீதியில் கவனமாகக் கையாளப்பட வேண்டியதாகும் என்றார்.

இந்த இடத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய தளபாட உலோகப் பொருள்கள் விற்கும் கடைகள், முகவர் நிலையங்கள் என்பவற்றுக்குச் சென்று நேரடியாக அவதானித்தவையையும் அவர்கள் கூறிய விடயங்களையும் இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகும். பொதுவாக இப்பொருள்களை வடபகுதிக்கு வெளியே எடுத்துச்செல்லத் தடை இருப்பதால் வியாபாரிகள் வருவது [...]
கொண்டாலும் மறைமுகம[...]
எனும் கேள்வி எழவே [...]
இடங்களில் பொருள்கள் [...]
யப்படுதல், கோவில் வ[...]
செய்யப்படுதல், களவா[...]
மைகள் இன்றும் காணப்ப[...]
பொருள்' விற்பனை செய்[...]
வெளிநாட்டுப் பயணிகள்[...]
வாங்கிக் கொண்டிருந்த[...]
வேறொரு பழைய தளப[...]
பழமையான செய்ஒநேர்த்[...]
தென்னிலங்கையைச் சே[...]
வருக்கு விற்கப்படுவதை[...]

இப்பொருள்கள் தொட[...]
செல்லப்படுகின்றனவா [...]
வங்கள் எழுப்பவே செய்[...]
புகையிலை, வாழைக்குலை[...]
வைத்து இவை கடத்தப்[...]
கேயே எங்கோ பதுக்கப்[...]
தொடர்கேள்விகளையும் [...]
வில்லை. சம்பந்தப்பட்டவ[...]
கவனத்தில் எடுக்கவேண்[...]

மேலும் விடுதலைப்புல[...]
வியலாளர் குழந்தை ம.ச[...]
விக்கையில் எமக்குச் சார்[...]
டுச் சின்னங்களை மட்டும்[...]
கடந்தகால வரலாற்றை [...]
யும் அவ்வாறே வரலாற்று[...]
அடியாகவே இத்தடை [...]
எனக் கூறுவதும் இங்கு [...]
டியதொன்றாகும்.

மேற்படி விடயம்தொட[...]
வர்கள் பின்வரும் விடய[...]
வைத்தனர். அரும்பொருள்[...]



சேலை [...]

சார்ந்ததாக, பண்பாட்டுக[...]
வேண்டும். அரசியல் ரீதி[...]
நாடாளுமன்ற உறுப்பின[...]
ஒதுக்கீடும், பாதுகாப்பு, [...]
நடவடிக்கைகளும் மேற்[...]
நூல் நிலையத்தை மீள[...]
பொருளகம் ஒன்றை மீள[...]
பிரதேச சபைகள் ஊடாக[...]
கள் மூலமாக இப்பிரக்ஞ[...]
படுத்தப்படுவதுடன் சேக[...]
சேகரிக்க வேண்டும். அரு[...]
கட்டியமைக்கவேண்டும் [...]

பேராசிரியர் அ.சண்மு[...]
பற்றிக் குறிப்பிட்டபோது. [...]
களை அறிமுகப்படுத்தி [...]
நம்பகத்தன்மையை ஏற்[...]
களிடம் பொருள்களை வி[...]
மையை உருவாக்கவேண்[...]
நிறுவனம் சார்பில் பேண[...]

இவ்விடயத்தினை [...]
கா.சிவத்தம்பி (இலங்கை[...]
களும் ஓர் அறிமுகம் - [...]
வருகிறது. "உண்மையில் [...]
இறங்குவதற்கான தரவுக[...]
நாம் இப்பொழுது செய்ய[...]
சகல அம்சங்களையும் ப[...]
திரட்டிக் கொள்வதாகும். [...]
ஞானபூர்வமாக மேற்கொ[...]
லில் செய்யப்படவேண்டு[...]

இந்நிலையில் தகவ[...]
சேகரிக்க முன்பே அ[...]
விட்டிருத்தல் என்பது எம[...]
குறைநிலைகளையே ஏற்[...]
திரட்டி ஆவணப்படுத்தி கு[...]
யிலாவது இவை எமக்கு [...]
யாவது உணர்வோமா?

யமா?

றைவு என இவர்கள் கூறிக்
கமாக இச்செயற்பாடு நிகழ்கிறதா
வ செய்கிறது. ஏனெனில், சில
ள் தொடர்ந்து கொள்வனவு செய்
வாகனம், கதவு கொள்வனவு
வாடப்படுதல் போன்ற நிலை
ளப்படுகின்றன. நாமொரு 'பழைய
செய்யும் கடைக்குச் சென்றபோது
கள் இந்த அரும்பொருள்களை
ந்தமையைக் காணமுடிந்தது.
ளபாட விற்பனை நிலையத்தில்
ர்த்தியுடைய அலுமாரியொன்று
சேர்ந்த சிங்கள வியாபாரி ஒரு
தையும் காணமுடிந்தது.
தொடர்ந்தும் வெளியில் எடுத்துச்
என்ற கேள்வியை இச்சம்ப
செய்கின்றன. சிலர் கூறுவதுபோல
தலை முதலியவற்றுள் மறைத்து
துப்படுகின்றனவா அல்லது இங்
க்கப்பட்டு வருகின்றனவா என்ற
யும் கேட்காமல் இருக்கமுடிய
டவர்கள் தாமதிக்காது இதனைக்
வண்டியது அவசியமாகும்.
ப்புலிகளின் இத்தடைபற்றி நாடக
ம.சண்முகலிங்கம் கருத்துத் தெரி
சார்பான அரசியல், மத, பண்பாட்
டும் பேணாது இப்பிரதேசத்தின்
ற உட்பொதிந்துள்ள யாவற்றை
ற்றுப் பதிவுகளுடன் பேணுவதன்
அர்த்தமுள்ளதாக அமையும்
கவனத்தில் எடுக்கப்படவேண்
தொடர்பாக கருத்துத் தெரிவித்த
டயங்களைப் பிரதானமாக முன்
ருள் சேகரிப்பு என்பது நிறுவனம்



ல அலங்காரம்

டுக்கழகம் சார்ந்ததாக அமைய
ரீதியில் கலாசார அமைச்சர்,
பினர் மூலமாக இதற்கான நிதி
பு, பேணுதல், ஆவணப்படுத்தல்
மற்கொள்ளப்படவேண்டும். புதிய
மீள அமைத்ததுபோல அரும்
மீளக் கட்டியமைக்க வேண்டும்.
டாக கலாசார உத்தியோகத்தர்
ரக்கை மக்கள் மத்தியில் ஏற்
சேகரிக்கக்கூடிய பொருள்களை
அரும்பொருளகம் ஒன்றை மீளக்
ம் என்பதாகும்.
ம்முகதாஸ் இப்பொருட் சேகரிப்புப்
து, பரந்துபட்ட அளவில் முகவர்
தி சேகரிக்கவேண்டும். இவர்கள்
ஏற்படுத்துவதுடன் அறியாதவர்
விற்கக்கூடாது - எனும் நிலை
வண்டும். சேகரிக்கப்பட்டவை ஒரு
பணப்படவேண்டும் - என்றார்.
எழுதும்போது பேராசிரியர்
கைத் தமிழ் பண்பாடும் கலை
- 1993) கூறுவது கவனத்திற்கு
வில் நாம் இன்னும் இம்முயற்சியில்
வுகளை உடையோம் அல்லோம்.
யவேண்டியது நமது பண்பாட்டின்
பற்றிய பூரண தகவல்களையும்
தும். அந்தப்பணி இன்னும் விஞ்
கொள்ளப்படவில்லை. அது முத
ண்டும்".
கவல்களையும், தரவுகளையும்,
அரும்பொருள்களை கைதவற
எமது பண்பாடு பற்றிய ஆய்வில்
ஏற்படுத்தும். எனவே, இவற்றைத்
குறிப்பெடுத்துக்கொள்ளும் வரை
கு மிகமிக அவசியம் என்பதை
?

# மனோகணேசனுக்கு எதிரான வழக்கில் அவருக்கு நீதிமன்று பிணை அனுமதி

## விசாரணை ஜனவரி 15ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,ஒக்.16

நீதிமன்ற உத்தர[illegible] நிறைவேற்றத் தடையாக இருந்தார் என்ற குற்றச்சாட்டின்[illegible] ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ்-மேல்மாகாண மக்கள் முன்ன[illegible] கொழும்பு மாவட்ட எம்.பியான மனோகணே[illegible]க்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது அவரைப் பிணையில் செல்ல நீதிவான் நீதிமன்றம் அனுமதியளித்தது.

25ஆயிரம் ரூபா ரொக்க பிணையிலும் இரண்டு அரச உத்தியோகத்தர்களின் சரீரப் பிணையிலும் இவர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கிராண்ட்பாஸ் பொலீஸார் இவர் மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

மனோகணேசனுடன் மற்றொரு சந்தேகநபரான கொலன்னாவைப் பிதேச சபை உறுப்பினர் மோசஸ் இராஜேந்திரனும் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசாரணயின்போது பிணை மனுவை ஆதரித்து வாதாடிய சட்டத்தரணி ஜே.வி.தவராசா நீதிமன்றத்தில் கூறியதாவது:-

எனது கட்சிக்காரர் நீதிமன்ற உத்தரவை அவமதித்தாரா, இல்லையா? என்பது விசாரணையின்போது ஆராயப்படவேண்டிய விடயம். ஆனால், அவர் அப்படி நடந்துகொண்ட சூழ்நிலையை நீதிமன்றம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

இது ஒரு மனிதாபிமான பிரச்சினை. கொலன்னாவை என்ற இடத்தில் உள்ள தமிழ்நாடு பிரதேசத்தில் வாழும் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்களின் வாழ்வுப்பிரச்சினை, அந்த மக்களின் வீடுகளை உடைக்க நீதிமன்ற உத்தரவை எடுத்துச் சென்ற அதிகாரிகளின் கடமைக்குத் தடைக்கல்லாக இருந்தார் என்பதே எனது கட்சிக்காரர் மீதான குற்றச்சாட்டு. ஆனால், எனது கட்சிக்காரர் அந்த இடத்தில் ஆவேசம் கொண்டிருந்த மக்களின் உணர்வுகளை அடக்கி விபரீதமான சம்பவங்கள் நடைபெறாமல் தவிர்த்துள்ளார்.

ஏழை மக்களின் பரிதாப நிலைகண்டு அதனைத் தீர்த்து வைக்கும் பொருட்டே எனது கட்சிக்காரர் முயன்றிருக்கிறார். ஆகவே, அவரைப் பிணையில் செல்ல அனுமதிக்க வேண்டும்.

- இவ்வாறு சட்டத்தரணி தவராசா கேட்டுக்கொண்டார்.

வாதத்தை ஏற்றுக்கொண்ட கொழும்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரஞ்சன் திஸாநாயக்க, மனோகணேசனையும், மோசஸ் இராஜேந்திரனையும் பிணையில் செல்ல அனுமதித்து எதிர்வரும் ஜனவரி மாதம் 15ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி தமிழ்நாடு பிரதேசத்தில் உள்ள வீடுகளை உடைக்கும் நீதிமன்ற உத்தரவை எடுத்துச்சென்ற அதிகாரிகளுடன் விவாதத்தில் ஈடுபட்டார் என்பதும், நீதிமன்ற உத்தரவை செயற்படுத்த விடாமல் தடுத்தார் என்பதுமே மனோகணேசனுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் ஆகும்.

மனோகணேசன் சார்பில் சட்டத்தரணிகள் கே.வி.தவராசா, சாலிய பீரிஸ், சிவகடாச்சம் ஆகியோர் சட்டத்தரணி தயாள் செபநாயகத்தின் அனுசரணையுடன் ஆஜராகினர்.

## காவிரி நதி நீர்ப் பிரச்சினை

# தமிழக மக்களின் துயரங்களில் ஈழத்தமிழர்கள் பங்கேற்கின்றனர்

## ஜெயலலிதாவுக்கு மகேஸ்வரன் கடிதம்

கொழும்பு,ஒக்.17

காவிரி நதி நீர்ப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவுதெரிவித்து இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை அரசாங்கத்தில் இலங்கைத் தமிழர்களின் ஒரே பிரதிநிதியாக அங்கம்வகிப்பவன் என்ற முறையில் இலங்கைத் தமிழ்மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்துகொள்வதற்காக இக்கடிதத்தை எழுதுகிறேன்.

மொழி, கலாசாரம், பண்பாடு, சமயம் ஆகியவற்றால் தமிழ்நாடும் தமிழீழமும் வரலாற்றுக்கு முந்திய காலம் முதல் பிணைக்கப்பட்டு இன்றுவரை உணர்வுகளால் இரு நாடுகளிலும் வாழும் மக்கள் ஒரே மக்களாக வாழ்ந்து வருகின்றனர். எமக்கிடையே ஒருவருக்கொருவர் அனுபவிக்கும் துன்பத்திலும் இன்பத்திலும் மற்றவர் வாளாவிருக்க முடியாது - என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள். அந்தவகையில் இன்று தமிழ்நாட்டு விவசாயப் பெருமக்கள் காவிரி நீர்ப் பிரச்சினையால் அடைந்துகொண்டிருக்கும் துன்ப, துயரங்கள் ஈழத்தில் வாழும் தமிழ் மக்களைப் பெரிதும் பாதித்துள்ளது.

வேளாண்மையைத் தமது பாரம்பரியத் தொழிலாகக் கொண்டுள்ள லட்சோபலட்சம் தமிழ்நாட்டு விவசாயிகள் கர்நாடக மாநில அரசின் விடாப்பிடியான செயலினால் ஆற்றொணா இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை அறியும்பொழுது எமது மக்கள் துயரப்படாமல் இருக்கமுடியாது. தமிழ்நாடு உங்கள் தலைமையில் அளப்பரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளது. அவ்வாறே காவிரி நீர்ப் பிரச்சினையில் நீங்கள் எடுத்துவரும் உறுதியான பல நடவடிக்கைகளை ஈழத்தமிழராகிய நாம் மனமாரப் பாராட்டுகின்றோம். நீங்கள் மேற்கொள்ளும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எமது ஆதரவும் ஒத்துழைப்பும் என்றும் உண்டு. காவிரி நதி நீர் விரைவில் தமிழ்நாட்டு மண்ணில் பாய வேண்டுமென ஈழத்தமிழர்கள் பிரார்த்திக்கின்றார்கள்.

அதி முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சினை குறித்து நேற்றுமுன்தினம் இந்தியக் குடியரசின் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் அவர்களுக்கு இங்குள்ள இந்தியத் தூதர் மூலம் ஒரு கடிதம் அனுப்பியிருந்தேன். அக்கடிதத்தில் இந்திய உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை மதித்து கர்நாடக அரசு செயற்படுத்துவதை உறுதிப்படுத்துமாறும் தமிழ்நாட்டு மக்களுக்கு நீதி கிடைக்க வழிவகை செய்யுமாறும் இலங்கைத் தமிழ்மக்கள் சார்பாக வேண்டுகோள்விடுத்துள்ளேன்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

# முஸ்லிம்களுக்குத் தனி அலகா? எதிர்ப்போம் என்கிறது ஜே. வி. பி.

கொழும்பு,ஒக்.17

"முஸ்லீம்களுக்குத் தனி அலகு கொடுப்பதை எதிர்த்து ஜே.வி.பி நாடளாவிய ரீதியில் போராட்டம் ஒன்றை நடத்தும். நாடு சிறுசிறு துண்டுகளாகத் துண்டாடப்படுவதைப் பெரும்பான்மை இனத்தவர்கள் அனுமதிக்கக்கூடாது."

ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ கடந்த திங்கட்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் தமிழர்களுக்கு நாட்டின் ஒரு பகுதியைப் பிரித்துக்கொடுக்கத் திட்டம் தீட்டிவிட்டது. இப்போது முஸ்லீம்களும் தனி அலகு கேட்டு நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் உத்தியோகப் பேச்சாளர் சரத் அமுனுகம முஸ்லீம்களுக்குத் தனி அலகு கொடுக்கத் தயார் என்று கூறியுள்ளார். அப்படியானால் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் தமிழர்களுக்கு தனிநாடு வழங்குவதையும் ஏற்றுக்கொள்கின்றார்களா?

அரசியல் லாபம் கருதித் தமது கொள்கையை நேரத்திற்கு நேரம் மாற்றிக்கொள்ளும் அரசியல்வாதிகளைப் பெரும்பான்மை இனத்தவர்கள் நம்பக்கூடாது.

எனவே, இடைக்கால நிர்வாகம் ஏற்படுத்தப்படுவதையும் முஸ்லிம்களுக்குத் தனிஅலகு கொடுப்பதையும் எதிர்த்து நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்தவுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ-12)

# திருமலை வைத்தியசாலை ஊழியர்கள் கறுப்புப்பட்டி அணிந்து பணியில்!

திருகோணமலை அரசினர் வைத்தியசாலைக்குச் சொந்தமான இரண்டு அம்புலன்ஸ்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து வைத்தியசாலை ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கறுப்புப்பட்டி அணிந்து வேலை செய்தனர்.

திருமலை வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் வி.கணேசபாகு, அம்புலன்ஸ்கள் தாக்கப்பட்டது குறித்துக் கருத்துத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஓர் அம்புலன்ஸில் நோயாளிகளும் மற்றைய அம்புலன்ஸில் வைத்தியர் ஒருவரும் சென்று கொண்டிருக்கும்போது, அபேபுர என்ற பிரதேசத்தில் ஒரு குழுவினர் வழிமறித்து வைத்தியரையும் சாரதியையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர். பின்னர் இந்த இடத்தைத் தாண்டிச்செல்லாது வந்த வழியே திரும்பிச் செல்லுமாறும் கூறினர். மற்றைய அம்புலன்ஸின் சாரதியும் வெளியே இழுத்துத் தாக்கப்பட்டுள்ளார். இதனால் நோயாளிகள் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதனைக் கண்டித்து நாம் ஒரு மணிநேரம் வேலை செய்யாது வெளிநடப்புச் செய்தோம். தற்போது கறுப்புப்பட்டி அணிந்து எமது எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றோம்.

- இப்படி அவர் கூறினார். (ஐ)

# காவல்துறையின் துயவால் ஹர்த்தாலன்று பயணம்

## வன்னிப் பயணிகள் தெரிவிப்பு

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஹர்த்தாலின்போது கண்டி வீதி வழியாக யாழ். நோக்கி பயணிகளுடன் வந்த வாகனங்கள் பளைப் பகுதியில் வைத்து வீதியில் மரக்குற்றிகள் போடப்பட்டு தடுக்கப்பட்டதாகவும் -

ஆயினும், காவல்துறையினரின் தலையீட்டினால் மரக்குற்றிகள் அகற்றப்பட்டு வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவது தெரியாமல் வன்னி பெருநிலப்பரப்பிலிருந்தும் வவுனியாவிலிருந்தும் வந்த ஐம்பதுக்கு மேற்பட்ட வாகனங்களை பளையில் ஹர்த்தாலில் ஈடுபட்டவர்கள் மேற்கொண்டு செல்லவிடாது தடுத்ததாகவும் -

இதனையடுத்து, வாகனங்களில் வந்த பொதுமக்கள் காவல் துறைப் பணிமனையில் முறையிட்டதாகவும் -

காவல்துறையினர் அவ்விடத்திற்கு வந்து குற்றிகளை அகற்றி வாகனங்கள் தொடர்ந்து பயணஞ்செய்ய அனுமதித்ததாகவும்- தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, ஹர்த்தால்தினத்தன்று வாகனப் போக்குவரத்து இல்லாததால் தனியார் கார் மற்றும் ஓட்டோக்கள் முகமாலைக்கு வந்து சேர்ந்தவர்களிடம் அதிக கட்டணம் அறவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரிக்கு 650 ரூபாவும், யாழ்ப்பாணத்திற்கு 900 ரூபாவும் கொடுத்து ஓட்டோவில் பயணஞ்செய்ததாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ஓ-117)

# மாமனும் மருமகனும் ஒருவர் காதை மற்றவர் துண்டிப்பு

மாமன் ஒருவருக்கும் அவரது மருமகனுக்குமிடையே இடம்பெற்ற சச்சரவில் மருமகன் தன் மாமனின் காதொன்றினைத் துண்டித்தார். பதிலுக்கு மாமனும் அந்த மருமகனின் காதை துண்டித்த சம்பவம் பொல்ஹாவலைப் பிரதேசத்தில் இடம்பெற்றது. இச்சம்பவத்தையடுத்து, துண்டிக்கப்பட்ட காதுகளை குளிரூட்டிய நீர்நிரம்பிய 'சொப்பிங்' பையில் பாதுகாப்பாக வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர். குருநாகல் போதனா வைத்தியசாலை டாக்டர்கள் துண்டிக்கப்பட்ட காதுகளை மீண்டும் அவர்களுக்குப் பொருத்தியுள்ளனர். தற்போது இருவரும் ஒரே 'வார்ட்'டில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ஒ)

# குடும்பநல உத்தியோகத்தர் ஆள் சேர்ப்பு

திருகோணமலை,ஒக்.17

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடமையாற்ற தமிழ்மொழி மூலக் குடும்பநல (மருத்துவ மாதர்) உத்தியோகத்தர்களைப் பயிற்றுவிப்பதற்கான ஆள்சேர்ப்புக்கு, வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்தியத்துறை அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ்மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் இன்னும் ஒரு பாடத்துக்கும் திறமைச் சித்தியுடன் ஒரு தடவையில் ஐந்து பாடங்களுக்கு குறையாதவாறு , இரண்டு தடவைகளுக்கு மேற்படாத தடவைகளில் குறைந்த பட்சம் ஆறு பாடங்களில் ஜி.சீ.ஈ. (சாதாரண தர) சித்தி பெற்றிருத்தலை ஆகக்குறைந்த தகைமையாக் கொண்டவர்களும், 18 வயதுக்கும் 40 வயதுக்குட்பட்ட வடக்கு - கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் "செயலாளர், சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சு வடக்கு - கிழக்கு மாகாணம் நீதிமன்ற வீதி, திருகோணமலை" என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.(ஒ-173)

# ரத்வத்தையின் இளையமகனுக்கு நீதிமன்ற உத்தரவு

கொழும்பு,ஒக்.17

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையின் இளையமகன் மஹேன் ரத்வத்தையை விசாரணையின் பொருட்டு குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தில் சமுகமளிக்குமாறு வத்தளைப் பிரதேச மேலதிக நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மூன்று வருடங்களின் முன்னர் வத்தளை கேகித்த பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவமொன்றுக்கு உடந்தையாயிருந்தார் என்ற சந்தேகத்தின்பேரில் மஹேன் ரத்வத்தைக்கு எதிராக அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில், இரகசியப் பொலீஸாரின் வேண்டுகோளுக்கமைய நீதிபதி இவ் உத்தரவைப் பிறப்பித்துள்ளார். இக்கொலைச் சம்பவம் சம்பந்தமாக மூன்று சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி கலைநிகழ்வு

வாழ்வகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமும், கலை விழாவும் எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

வாழ்வகத்தின் உபதலைவர் ஆ. இரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளையும் கௌரவ விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக யா/யூனியன் கல்லூரி அதிபர் சு. புண்ணியசீலன், யா/இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆ.சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வாழ்வகத்தின் நிர்வாகி செல்வி அ.சின்னத்தம்பி, ஆறு.திருமுருகன் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். தொடர்ந்து வாழ்வகச் சிறார்களினதும், உதவி வழங்குவோரினதும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

100 நாடுகளுக்கு

மேலான

தெரிவுகளின் சிகரம்

என்றும்

நின்று நிலைக்கும்

அழகுடன் ...



**R.A.K**

**Floor & Wall Tiles**

EXEL R.A.K. தரை மற்றும் சுவர் ஓடுகள் உலகளாவிய ரீதியில் வீட்டு உரிமையாளர்களினாலும் கட்டட நிபுணர்களினாலும் விரும்பப்படும் தெரிவு. இதன் பரந்த தெரிவு, நீடித்த பாவனை மற்றும் இலகுவான பராமரிப்பு இவற்றுடன் சிக்கனம்... உலகின் 100 நாடுகளுக்கு மேலான தெரிவுகளின் சிகரமாக உருவாக்கியுள்ளது.

HOME EXEL

EVERYTHING FOR EVERYONE

ஏக விற்பனை நிலையம்

446 ஆர். ஏ. டீ மெல் மாவத்தை, கொழும்பு 3.

தொலைபேசி: 565697. தொலைநகல்: 074 715008

மின்னஞ்சல்: info@exellanka.com

இணையத்தளம்: www.exel-holdings.com

EXEL

Alliance Exel Collaboration

# எமது மக்களின் விடுதலைக்காகவே புலிகளுடன் இணைந்து செயற்படுகிறோம்!

## கலந்துரையாடலில் மாவை சேனாதிராஜா எம்.பி. உரை

யாழ்ப்பாணம்,ஒக்.17

பேரினவாத சக்திகளிடம் அடிபணிந்து போகக்கூடாது என்பதற்காகவும் எமது மக்கள் சுதந்திரமான விடுதலைக்காகவும் ஒரு புரிந்துணர்வு அடிப்படையிலேயே விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

யாழ்.ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயத்தில் கட்சி ஆதரவாளர்களுக்கிடையே நடைபெற்ற 'சமகால அரசியல் நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலில் உரையாற்றும்போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

கடந்த பல வருடங்களாகப் பேரினவாத சக்திகளும், ஆயுத வியாபாரத்தில் பெருத்த இலாபமடைந்தவர்களும் இந்த நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். இதனால் இங்கு நடைபெறுகின்ற யுத்தம் தொடர்ந்து நடைபெறவேண்டும் என விரும்பி தமிழர்களுக்கு எந்த ஒரு உரிமைகளும வழங்கக்கூடாது என்று ஆர்ப்பரித்தனர். இவ்வாறான கட்டங்களில் எமது கட்சியானது பலவகையான ஜனநாயகப் போராட்டங்களை முன்னெடுத்திருந்தமை யாவரும் அறிந்ததே. ஆனால அவற்றுக்காக எமக்குக் கிடைத்த சன்மானம் படுகொலைகளும், பாலியல் வல்லுறவுகளும், கொள்ளைச் சம்பவங்களும், இராணுவ சட்டமுறைகளுமே தவிர வேறு எவையுமல்ல.

இந்தச் சந்தர்ப்பத்தில்தான் எம் மக்களையும் எமது மண்ணையும் பாதுகாப்பதற்காக ஆயுதப் போராட்டத்திற்குத் தள்ளப்பட்டோம். ஆரம்ப காலகட்டங்களில் பல இயக்கங்கள் இருந்தபோதும் பாரிய ஒரு இராணுவத்துடன் போராடக்கூடிய ஒரு இயக்கமாக வளர்ந்திருந்தது தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டுமே.

ஏனைய இயக்கங்களில் ஒவ்வொரு 'பகுதியினரும் அரசுடன் இணைந்து அவர்களிடம் கோடிக்கணக்கான வருமானத்தைப் பெற்று இராணுவத்தின் கைக்கூலிகளாக மாறி எமது மக்களையும் போராட்ட சக்திகளையும் காட்டிக்கொடுத்தனர்.

பேரினவாத அரசிற்கும், இராணுவ சக்திகளுக்கும் ஆதரவாகச் செயற்பட்டு தமிழினத்தை அழிப்பதற்குத் துணைபோகக்கூடாது. தனி மனிதனுடைய தேவையிலும் பார்க்க ஒட்டுமொத்த சமுதாய நலன் கொண்டவர்களாக நாம் செயற்படவேண்டும்.

இக்காலகட்டத்தில்தான் நாமும் போராட்டத்தின் பங்காளிகளாகச் செயற்படவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்மூலம் அறிவு சார்ந்த இளைஞர் சமுதாயத்தையும் எம்முடன் இணைத்து போராட்டப் பாதையில் முன்னோக்கிச் செல்லமுடியும்.

இதற்காகத்தான் எமது கட்சி எமமுடன் இணைந்த கட்சிகளை இணைத்து தமிழ் தேசிய கூட்டமைப்பை உருவாக்கி அதன்மூலம் எமது போராட்டத்தின் தேவைகளையும் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டி தமிழீழ விடுதலைப் புலிகளை ஆதரித்து 'தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான், அவர்களுடனேயே இப்பிரச்சினைக்குப பேசி தீர்வு காணப்படவேண்டும்' என்று வற்புறுத்தி அதில் வெற்றியும் கண்டோம்.

உண்மையில் அன்று காலத்தின் தேவை கருதி ஒன்றுபடாது தனித்து நின்று செயற்பட்டிருப்போமானால் இன்றைய சமாதான சூழ்நிலை உருவாகியிருக்கச் சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

டக்ளஸ் தேவானந்தா போன்ற அரசியல் வியாபாரிகள் எமது மக்களிடம் இருந்து ஒதுக்கப்படவேண்டும். காலத்தின் தேவைக்கேற்ப இலக்குகள் மாற்றப்பட்டாலேயே எமது கட்சியை வளர்க்கமுடியும். அப்போது தான் இளைஞர் சமுதாயத்தை எம்முடன் இணைக்கமுடியும். பல களமுனைகளில் வெற்றிகளைக் கண்ட விடுதலைப் புலிகளுடன் நாம் இணைந்து செயற்படுவதன்மூலம் எமது மண்ணில் சுதந்திரமான வாழ்க்கையை ஏற்படுத்தமுடியும் என்பதற்காகத்தான் நாம் அவர்களுடன் புரிந்துணர்வு அடிப்படையில் இணைந்து செயற்பட முன்வந்தோம்.

அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது புலிகள் பேச்சுக்கு வரமாட்டார்கள் என்று எண்ணிய பேரினவாதிகளின் எண்ணத்தில் மண்ணை அள்ளிப் போட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைக் குழப்பியடித்து மீண்டும் இந்த மண்ணில் இரத்த ஆறு ஏற்படுத்தி சுயலாபம் பெறுவதற்கு பல் முயற்சி செய்து வருகின்றனர். அந்த வகையில் ஜே.வி.பி., சிஹல உறுமய ஆகியவையும் படையினர் மற்றும் பொலீஸாரில் ஒரு பகுயினரும் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். அதன் வெளிப்பாடுகளையே விடுதலைப் புலி உறுப்பினர்கள் மீதான தாக்குதல்கள், பொது மக்கள் படுகொலைகள் ஆகியவை சுட்டிக்காட்டுகின்றன.

இவை அனைத்திற்கும் எதிராக எமது மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து ஒழுங்கமைக்கப்பட்ட பாரிய ஜனநாயகப் போராட்டங்களை நடத்தி எமது பலத்தை சர்வதேச உலகிற்குக் காட்டவேண்டும். அப்போதுதான் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தமும், தாய்லாந்தில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும இடையில் இடம்பெறுகின்ற பேச்சும் வெற்றிபெறும்.

இன்று இராணுவ சமபலத்துடன் பேச்சு நடைபெற்று வருகின்றது. அதனை உடைப்பதற்கு எந்தச் சக்திகளுக்கும் இடமளிக்கக்கூடாது. சமாதானப் பாதையில் தமிழ்மக்கள் தவறு விடவில்லை என்பதனை உலகிற்கு எடுத்துக்காட்ட அனைத்துத் தமிழ்மக்களும் அமைதியாக இருக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகள்மூலம சரியானதொரு தீர்வு கிட்டும் என்றால நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஓ-4-5)

# ஓராண்டு காலம் சிறையிலிருந்த தமிழ்க்கைதி பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம்,ஒக்.17

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த ஓராண்டு காலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நபர், நேற்றுமுன்தினம் யாழ்.நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஊரெழு மேற்கு, சுன்னாகத்தை சேர்ந்த செல்லத்துரை குகராஜா என பவரே யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜாவின் கட்டளைப்படி யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

யாழ். மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட இரு அரச உத்தியோகத்தர்களின் தனித்தனி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் இவர் விடுவிக்கப்பட்டார்.

எதிர்வரும் 2ஆம் திகதி முதல் மூன்று வாரங்களுக்கு ஒரு தடவை கிராம சேவகர் முன்னிலையில் இவர் கையொப்பமிடவேண்டும் எனவும் மன்றினால் கட்டளையிடப்பட்டது.(ஓ-9-5)

# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு?

கொழும்பு,ஒக்.17

சகல அரச ஊழியர்களுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம்முதல் சம்பளம் அதிகரிக்கப்படவிருப்பதாக சம்பந்தப்பட்ட அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச ஊழியர்களின் சம்பளம்பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அடங்கிய அறிக்கை கடந்த வாரம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த அறிக்கையின் அடிப்படையில் புதிதாக சம்பள உயர்வு வழங்குவது சம்பந்தமாக அரசின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளபோதும் எந்த அடிப்படையில் அதனை மேற்கொள்வதென இதுவரை தீர்மானிக்கப்படவில்லையென உள்துறை அமைச்சர் காமினி லொக்குகே கூறியிருக்கிறார்.

வாழ்க்கைச் செலவு அதிகரித்திருப்பதைக் கருத்திற்கொண்டு பொருளகளின் விலை உயர்வால் கஷ்டமுறும் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வளித்து அவர்களது வினைத்திறனை அதிகரிக்கச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.. (ஓ)

## குளிரூட்டப்பட்டவை உட்பட

# வடபகுதிக்கு 60 பஸ்களை அனுப்ப பிரதமர் உத்தரவாம்!

## அமைச்சர் மகேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்.மாவட்டத்துக்கு ஆறு குளிரூட்டப்பட்ட பஸ்கள் உட்பட 60 பஸ்களை வழங்கும்படி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமது செயலாளர் பிரட்மன் வீரக்கோனுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் போதிய பஸ்கள் இல்லாததால் பொதுமக்கள் பெரும் பிரச்சினைகளை எதிர்நோக்குவதாகவும் -

நூறு பஸ்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் -

பிரதமரை தான் கேட்டிருந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொளளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தியாவில் இருந்து 60 பஸ்களை இறக்குமதி செய்து யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும்படி பிரதமர் பணிப்புரை விடுத்ததையடுத்து பஸ்களை இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யும் நடவடிக்கையை பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# கள்ளநோட்டு தயாரித்த நபர் பாணந்துறையில் கைதானார்

கொழும்பு,ஒக்.17

கணனிமூலம் ஆயிரம் ரூபா பெறுமதியான அச்சிடப்பட்ட கள்ளநோட்டுக்கள் தயாரித்த நபரொருவரை அண்மையில் பாணந்துறை கெசல்வத்தை பொலீஸார் கைதுசெய்தனர்.

தமக்குக் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றைப்படுத்து பொலீஸார் பரந்த, என்ற இடத்தில் கணனியைப் பயன்படுத்தி கள்ளநோட்டுத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்த சந்தேக நபரைக் கையும் மெய்யுமாகக் கைதுசெய்துள்ளனர்.

அவரிடமிருந்து ஒரு தொகை கள்ளநோட்டுக்களையும், கணனி உட்பட்ட வேறு உபகரணங்களையும் பொலீஸார் கைப்பற்றினர். கணனிக் கல்வியில் 'டிப்ளோமா' பட்டம் பெற்றவரான சந்தேக நபர் இதுவரை 500 கள்ள நோட்டுக்களைத் தயாரித்து, நல்ல நோட்டுக்களைப் பெற்றுக் கொண்டு அவற்றின் இரு மடங்கு பெறுமதி கொண்ட கள்ளநோட்டுக்களை விநியோகித்திருப்பது தெரிய வந்துள்ளது. மேலும், கைப்பற்றப்பட்ட கள்ள நோட்டுக்கள் யாவும் எதுவித வேறுபாடுகளும் காணமுடியாதவாறு புதிய நோட்டுக்கள் போன்றிருப்பதாகவும் தெரிவித்த பொலீஸார் மேற்கொண்டு விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ஓ)

# பணியில் இறந்த ஊழியருக்கு காப்புறுதிக் கொடுப்பனவு

## நேற்றைய நிகழ்வில் வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஒக்.17

பணியில் இருக்கும்போது மரணம் அடைந்த சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான காப்புறுதி கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு நேற்று கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள சிமெந்துக் கூட்டுத்தாபன காரியாலயத்தில் நடைபெற்றது.

சிமெந்துக் கூட்டுத்தாபன பொறுப்பதிகாரி கே.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணியின்போது மரணமடைந்த நான்கு ஊழியர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா விதம் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் கொடுப்பனவு வழங்கப்பட்டது. காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் வடபிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எவ்.அரியநாயகம் இவர்களுக்கான காசோலையை வழங்கினார்.

1990ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதுதான் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் கீழ் சிமெந்துக் கூட்டுத்தாபன மரணமடைந்த ஊழியர்களுக்கான காப்புறுதிக் கொடுப்பனவு யாழ்ப்பாணத்தில் வழங்கப்படுகிறது. இத்தகைய கொடுப்பனவுகள் முன்னர் கொழும்பிலுள்ள தலைமைக் காரியாலயத்தால் வழங்கப்பட்டுள்ளன. 90முதல் 95ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ். அலுவலகத்துக்கும் தலைமையகத்துக்குமான சரியான தொடர்பு இருக்கவில்லை. இதனால் இக்கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நடவடிக்கையை நாம் துரிதமாக மேற்கொள்ள முடியாமல் இருந்தது. இப்போதுதான் காப்புறுதிக் கட்டணத்துக்குரியவர்கள் உரிய முறையில் எம்முடன் தொடர்புகொண்டுள்ளனர். இதன் அடிப்படையில் இக்கொடுப்பனவு வழங்கப்படுகிறது என்று பிராந்திய ஆணையாளர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் சிமெந்துக் கூட்டுத்தாபன ஆளணி உத்தியோகத்தர் சூரியகுமார், விற்பனை உத்தியோகத்தர்களான பாலகிருஷ்ணன், ஜோசப் ராஜசேகரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (ஓ-8)

## சாயி நிலையத்தில் போயா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஒக்.17

ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிமுதல் போயாதின ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நகர சங்கீர்த்தனத்துடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி தொடர்ந்தும் ஓம்காரம், காயத்திரி மந்திர ஜெபம், இலட்ச அர்ச்சனை, பண்ணிசை, சொற்பொழிவு மற்றும் பஜனை என்பவற்றுடன் நாராயண சேவையும் இடம்பெறவுள்ளது. (ஓ-9)

## புகைப்படக் கண்காட்சி


யாழ்ப்பாணத்தின் ஆரம்ப காலப் புகைப்படங்களின் காட்சி இன்று முதல் எதிர்வரும் 20ஆம் திகதி வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரையிலும் யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைவட்டத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஓ-3)



காப்புறுதிக் கூட்டுத்தாபன வடபிராந்திய முகாமையாளர் திருமதி ஆர்.எவ்.அரியநாயகம் காப்புறுதிக் கொடுப்பனவை மரணமடைந்த சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர் ஒருவரின் துணைவியாரிடம் கையளிப்பதையும், இந்த நிகழ்வில் காப்புறுதிக் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படம்: தேவராஜன்)*

## சாயி சிந்தனை



### 'எப்போதும் உதவுங்கள்'

இடைவிடாத பிரார்த்தனைகள்மூலம் மனிதன் எந்த ஒரு கடுமையான சூழ்நிலையையும் சுலபமாக எதிர்கொள்ளமுடியும். உங்கள் மனதில் மேன்மையான உணர்வுகளை வளர்த்துக்கொண்டு தேவையுள்ளவர்களுக்கு உதவுங்கள். யாரையும் துன்புறுத்தாதீர்கள். யாருக்கும் தீங்கு செய்யாதீர்கள். நீங்கள் அடுத்தவருக்குச் செய்த தீங்கு உங்கள் மேலேயே திரும்பி வந்து தாக்கக்கூடும். பிறரை விமர்சிப்பதும் உலகில் வழக்கமாகி விட்டது'. இவை நல்லதல்ல எதிர்மறையானவை. அதைவிடுத்து நேரான எண்ணங்களையும், உணர்வுகளையும் வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களது தீய உணர்வுகளைத் தள்ளி வைக்காவிடில் நீங்கள் என்ன படித்தும் என்ன பயன்? ஒருவன் எவ்வளவுதான் படித்தவனாக இருந்தாலும், புத்திகூர்மை மிக்கவனாக இருந்தாலும், தனது உண்மையான வடிவமான ஆத்மாவை உணராதவரை அவன் முட்டாள்தான்! குறுகிய மனம் படைத்தவன். அவனது தீய குணங்களை விலக்கமாட்டான்.

நவீன கல்வி முறை வாதப்பிரதிவாதங்களுக்கு உதவுகிறதே தவிர முழுமையான ஞானம்பெறப் பயன்படுவதில்லை. அமரத்துவத்துக்கு உங்களை அழைத்துச் செல்லாத உலகியல் கல்விபெற்று என்ன பயன்? எந்த அறிவு உங்களை நிரந்தரமானவராக ஆக்குமோ அதனைப் படித்து, நடைமுறைப்படுத்துங்கள். மற்றவருக்கு உதவி செய்வதன்மூலம் ஒருவன் உயர்நிலையடைகிறான். மற்றவரைத் துன்புறுத்துவதன்மூலம் பாவம் செய்தவனாகிறான். 'எப்போதும் உதவுங்கள்; ஒருபோதும் காயப்படுத்தாதீர்கள்.' இதுதான் பதினெட்டுப் புராணங்களும் கூறும் சாராம்சம். நீங்கள் துன்பப்பட்டாலும் அதனைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். மற்றவரைத் துன்புறுத்தாதீர்கள். கடவுள் உங்களைப் பாதுகாத்துக்கொள்வார்.

*(ஆதாரம்:- சனாதன சாரதி)*

# கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

## வெற்றிடங்கள்

### கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்

1. கல்வித்தராதரம் : க.பொ.த. (சா/த) சித்தி (இளைப்பாறிய பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)
2. உயரம் : 5'4" (குறையாமல்)
   மார்பு : 32"
3. நல்ல தேகாரோக்கியமும், நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.
4. நேர்முகப் பரீட்சை :- 19.10.2002 சனிக்கிழமை காலை 10 மணிக்கு கீழ்குறிப்பிட்ட ஆவணங்களுடன் பிரசன்னமாயிருக்கவும்.
   a) கிராம அதிகாரியின் நற்சான்றிதழ் (6 மாதங்களுக்கு உட்பட்டது)
   b) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
   c) கல்வித் தராதரம்
   d) தே.அ.அ., வி.அ.அ. போட்டோ பிரதி

*இல.43, கல்லூரி வீதி,*
*யாழ்ப்பாணம்,*
*(யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக)*

- பணிப்பாளர்.

(C/24288)


# அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## வெளிவாரிப்பட்டப்படிப்பு பதிவு 2001/2002

மேற்படி கல்வியாண்டின் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான வெளிவாரிப்பட்டப் படிப்புகள் பதிவுகள் 31.10.2002 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

1. வர்த்தக முதற் கற்கைநெறி
2. கலை முதற் கற்கைநெறி
3. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) முதலாம் வருடம்
4. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) இரண்டாம் வருடம்
5. நுண்கலைமாணி (சங்கீதம்/நாட்டியம்) மூன்றாம் நான்காம் வருடம்
6. சிறப்புக் கலைமாணி பகுதி I

*குறிப்பு:* மேற்படி பதிவுகள் தொடர்பான சகல நடவடிக்கைகளும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் அமைந்துள்ள வெளிவாரிப் பட்டப்படிப்புப் பதிவுகள், பரீட்சைகள் அலகில் மட்டுமே மேற்கொள்ளப்படும். பிற நிறுவனங்களோ, முகவர்களோ இதற்குப் பொறுப்புடையவர்கள் அல்ல என்பது கவனத்திற்கு உரியதாகும்.

31.10.2002இற்குப் பின் கிடைக்கும் எந்த விண்ணப்பமும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விவரங்களுக்கு 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும்.

பதிவாளர்
15.10.2002

(சி-24287)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சூரியஜீவன் ஆனந்தி

திருமதி சூரியஜீவன் ஆனந்தி அவர்கள் 16.10.2002 கனடாவில் இறைபதமடைந்துவிட்டார். இவர் M.J.சூரியஜீவனின் அருமை மனைவியும் காலஞ்சென்ற மனுவேல் மரியாம்பிள்ளை(இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் கசில்டா மங்களநாயகி மரியாம்பிள்ளையின்(இளைப்பாறிய ஆசிரியை) அருமை மருமகளும் நல்லதம்பி - பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் ஆனந்தன், செல்வி சாம்ஸனின் சகோதரியும் Rev.SR.M. மரீனா (HOLYCROSS), M.நிருந்திரா(HUDEC), Rev.Bro.சறத்ஜீவன், M.J. சக்திஜீவன்(வேலணை பிரதேச சபை), ஜமுனா சக்திஜீவன் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*5,பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம்.* (9565) C.M.மரியாம்பிள்ளை

## திருமதி பேரின்பநாயகி சிவராசா

கோட்டைக்காடு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பேரின்பநாயகி சிவராசா அவர்கள் நேற்று (16.10.2002) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முருகன் கதிரவேலு - வேலம்மா தம்பதியரின் அன்பு மகளும் இராமு சிவராசாவின் அன்பு மனைவியும் கருணாகரன், தெய்வேந்திரன், நவநீதன், கமலேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி ஜெயந்தி உமாகாந்தன் (சுவிஸ்), திருமதி வனிதா காந்தரூபன் (சுவிஸ்) பன்னீர்செல்வன், பகீரதன் (லண்டன்), அகிலன், ரமணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் உமாகாந்தன், காந்தரூபன், தவனேஸ் ... ஆகியோரின் அன்பு மாமியாரும் அருந்ததி, சுவிஸ்கா ஆகியோரின் ... அவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17.10.2002) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடையேற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 1.00 மணியளவில் மல்லாகம் தோந்தலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*இல்லம், ... கோட்டைக்காடு, மல்லாகம்* (9567) சி.அகிலன் (மகன்)

# 'உறவுகள் சங்கமம்' இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஒக்.17

யாழ்ப்பாணத்துக்கு வருகை தரும் வெரித்தாஸ் வானொலிக் குழுவினருடனான 'உறவுகள் சங்கமம்' என்னும் சந்திப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்த நிகழ்விற்கு வெரித்தாஸ் வானொலி நேயர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்.

(ஒ-3)

# ஒறேற்றரின் பிறந்த நாள் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.17

ஒறேற்றர் சுப்பிரமணியத்தின் 100 ஆவது பிறந்தநாள் விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் முன்னாள் ஆசிரியர் சி.ஞானச்சந்தரமூர்த்தி நினைவுரையையும் யாழ்பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை நினைவுப் பேருரையையும் நிகழ்த்துவர்.

கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் பி.புவனராஜா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஒ-3)

# மிதிவெடிகளை அகற்றுமாறு கோரிக்கை

கொழும்பு,ஒக்.17

காரைநகர் பலகாட்டுக் குறிச்சியில் நாராயணி கேணிக்கு தெற்கேயும், நம்பாலை வீதிக்கு தெற்கேயும் கடற்படைத்தளம் வரையுள்ள பிரதேசத்தில் மிதிவெடிகள் இருக்கலாம என அஞ்சப்படுவதால் வன்னியிலிருந்துவரும் மக்கள் அப்பகுதியில் மீளக்குடியமரத் தயங்குகின்றனர்.

முன்னர் நம்பாலை வீதிக்கு தெற்கே இரு இடங்களில் இருவர் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்துள்ளனர். எனவே, மக்கள் இவ்விடங்களில் மீளக்குடியமர வசதியாக மிதிவெடிகளை அகற்ற ஏற்ற ஒழுங்குகளை செய்துதருமாறு காரைநகர் வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஒ-ரி)

# கொழும்புத்துறை முன்பள்ளி நிலையம் மீண்டும் ஆரம்பம்

கொழும்புத்துறை,ஒக்.17

கொழும்புத்துறை கிழக்கில் இடப்பெயர்வின் பின் மீண்டும் முன்பள்ளி நிலையம் எதிர்வரும் 21ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 4ஆம் குறுக்குத் தெருவில் இதற்கென ஒதுக்கப்பட்ட கட்டடத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பகுதி முற்போக்கு இளைஞர்களுக்கும் பெற்றோருக்கும் இடையிலான கலந்துரையாடலில் முன்பள்ளி நிலையத்தை மீண்டும் இயக்குவதென முடிவுசெய்யப்பட்டது.

மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் இருந்து 30 இற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இங்கே கல்வி பயில தமது பெயர்களைப் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

# முல்லைத்தீவில் சிகிச்சை முகாம்

வல்வெட்டித்துறை வைத்தியசாலை அபிவிருத்திச்சபையும் முல்லை மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசமும் இணைந்து நடத்தும் இலவச கண் சிகிச்சை முகாமும், மூக்குக்கண்ணாடி வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தில் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே.மயிலேறும்பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளன.

40 வயதுக்கு மேற்பட்ட 200 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. அன்றையதினம் குருதி அமுக்கம், சலரோகம் ஆகியவை தொடர்பான சோதனைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதில் பயனடைய விரும்புவோர் அலம்பில், முல்லைத்தீவு, பொக்கணை ஆகிய பிரதேசங்களில் உள்ள அரசியல்துறை அலுவலகங்களில் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (ஒ-ரி)

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் இரு கைதிகள் மட்டுமே யாழ்.சிறையில்!

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ், யாழ். சிறைச்சாலையில் தற்போது இருவர் மட்டுமே தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக யாழ். சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களும், விரைவில் பிணையில் விடுவிக்கப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9-5)

# மனம் நிறைந்து வாழ்த்துகின்றோம்



13.10.2002 ஞாயிறன்று நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் 'விஞ்ஞானமாணி' பட்டம் பெற்ற அல்வாய், மலர் மஹாலைச் சேர்ந்தவரான

## திரு. செல்வலிங்கம் சாம்பசிவம்

(B.Sc.)

அவர்கள் மேலும் பட்டங்கள் பெற்று கல்வியில் உயர்வடைய வேண்டுமெனப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர்:-*
திரு. ஆ.கதிரவேல் (J.P. - பெரியதந்தை)
திருமதி நாகேஸ்வரி துரைராஜா (பெரியதாய்)
*மைத்துனர்கள்:-*
திரு. ச.ஸ்ரீதரன் (மக்கள் வங்கி)
திரு. ந.யோகரத்தினம் (இலங்கை வங்கி)
திருமதி துளசி சத்தியலிங்கம் (லண்டன்)
திரு. ஐ.குமாரதாசன் (ஆசிரியர்)
திரு. செ.குமரகுரு (சுவிஸ்)
திரு. க.காண்டீபன் (லண்டன்)

*அல்வாய்.* (9570)

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் சர்வமங்களகரமான ஸ்ரீ சித்திரபானு வருடம் ஐப்பசி மாதம் 3ஆம் நாள் (20.10.2002) ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி திதியும் ரேவதி நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய மகர லக்கன மதியம் 1.45 முதல் 3.35 வரை உள்ள சுபமுகூர்த்த நல்வேளையில்

| எமது கனிஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **பார்த்திபன்** அவர்களுக்கும் | எமது சிரேஷ்ட புத்திரி திருநிறை செல்வி **சிந்துஜா** அவர்களுக்கும் |
|---|---|

திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு லண்டனில், திருமணம் நடைபெறுகிறது என்பதை எமது உற்றார், உறவினர், நண்பர்கள், கோப்பாய் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

திருமணம் நடைபெறும் இடம்:
*Alperton Community School Hall,*
*Alperton, HAO-4PW, London.*

திரு.திருமதி செல்வரட்ணம்,
அச்சுவேலி.
T.P.No.: 00941-792122:66

திரு.திருமதி கமலநாதன்,
மூத்தவிநாயகர் கோயில் வீதி,
ஆனைக்கோட்டை.

(9568) (இரு வீட்டார் அறிவிப்பு)

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சித்திரபானு வருடம் ஐப்பசித்திங்கள் முதலாம் நாள் 18.10.2002 வெள்ளிக்கிழமை காலை 7.20 மணிமுதல் 7.50 மணிக்குள் வரும் சுபமுகூர்த்த நல்வேளையில்,



எமது கனிஷ்ட புத்திரி திருநிறைசெல்வி

## ரேவதி

அவர்களுக்கு



நல்லூர் சட்டநாதர் வீதியிலமைந்துள்ள திவ்யஜீவன சங்க மண்டபத்தில் பூப்புனித நீராட்டு விழா நிகழ்த்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வாசிப்பாளர்:
திரு.S.பாலமுருகன் *(நாதஸ்வரம்)*
அவர்களும் பாரியாரும்
*சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.* (9570)

தங்கள் நல்வரவை விரும்பும்:
திரு.P.சுப்புச்சாமி *(நாதஸ்வர வித்வான்)*
அவர்களும் பாரியாரும்.

# சின்னஞ்சிறு விளம்பரம்


## தேவை

சிறிய குடும்பமொன்றுக்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு 50 வயதிற்கு மேற்பட்ட, பொறுப்புகளற்ற, குடிப்பழக்கம் இல்லாத உதவியாளர் தேவை (கூடிய சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கலாம்). தொடர்பு: சி.எம்.எஸ் நாதன் எழுத்தாளர், 2ஆம் குறுக்குத்தெரு, மிருசுவில். (9543)

## விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக்கோழிகள், கல்பேட்ஸ், சேவல் என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக) கட்டப்பிராய்.(9499)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima Broiler குஞ்சுகள், அதிவிசேட Prima பேட்டுக் குஞ்சுகள இன்று மாலை பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9514)

## தவறிவிட்டது

சண்டில் வீதி, கரவெட்டியைச் சேர்ந்த கந்தசாமி ராஸ்ரூபன் என்பவருடைய தேசிய அ.அ.(இல. 783004887V) நெல்லியடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேலுள்ள முகவரியில் ஒப்படைக்கவும் (சன்மானம் வழங்கப்படும்). (9557)

## மணமகள் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1971இல் பிறந்த, அனுஷம் 3ஆம் பாதம், Netherland நிரந்தர வதிவிடம் பெற்ற, சுயமாகத் தொழில் நடத்தும், அழகிய, படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் (தைமாதம் மணமகன் நாடு திரும்புவார்). தொடர்பு: விளம்பர இல. 1671, மே/பா உதயன் (9553)

## கோழித்தீன் விற்பனைக்கு

Original Prima கோழித்தீன் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். மொத்தமாக எடுப்போருக்கு விசேட கழிவுண்டு. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (9512)


## யாழ்.பல்கலையில் நினைவுப் பேருரை

சேர் பொன்.இராமநாதன் நினைவுப் பேருரை நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

'நடைமுறையும் நோக்கும்' என்ற தலைப்பில் உயர்நீதிமன்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் கருத்துரை வழங்குவார். இதனைத் தொடர்ந்து யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (ஒ-8)

# ஆசிய – பசுபிக் செய்தியாளரின் 14ஆவது மாநாடு கொழும்பில்

## ஒக்.27இல் ஆரம்பமாகிறது

கொழும்பு,ஒக்.17

ஆசிய - பசுபிக் சுற்றுச்சூழல் பத்திரிகையாளர் அமைப்பின் 14ஆவது மாநாடு எதிர்வரும் 27ஆம் திகதிமுதல 31ஆம் திகதிவரை அளுத்கம கலுவமோதர ஏடன் ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

பொதுநலவாய சுற்றுச்சூழல் பத்திரிகையாளர் கூட்டமைப்பு, இலங்கை சுற்றுச்சூழல் பத்திரிகையாளர் அமைப்பு ஆகியன இந்த மாநாட்டுக்கு அனுசரணை வழங்குகின்றன.

இந்த மாநாட்டின் ஆரம்ப நிகழ்வு எதிர்வரும் 27ஆம் திகதி காலை 9.45 மணிமுதல் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கலந்துகொள்கிறார்.

சுற்றுச்சூழல் பத்திரிகையியல் டிப்ளோமா பரிசுச் சான்றிதழ்கள் இந்த நிகழ்வில் வழங்கப்படவிருக்கின்றன.

ஐ.நா.சுற்றுச்சூழல் அமைப்பு, இலங்கை சுற்றுச்சூழல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு மற்றும பல அபிவிருத்தி முகவர் நிறுவனங்கள் ஆகியன இந்த மாநாட்டுக்கு உதவிபுரிகின்றன.

இந்த மாநாட்டில் ஆப்கானிஸ்தான், அங்கோலா, ஆஸ்திரேலியா, பங்களாதேஷ், பூட்டான், பிரிட்டன், கம்போடியா, சீனா, எகிப்து, பிஜி, பிரான்ஸ், ஜேர்மனி, கானா, ஹங்கேரி, இந்தியா, இந்தோனேஷியா, ஈரான், இத்தாலி, ஜப்பான், கஜகஸ்தான், கென்யா, கிறிபத்தி, தென்கொரியா, லாவோஸ், மலேஷியா, மாலைதீவு, மொறிஷியஸ், மைகிறோனேஷியா, மொங்கோலியா, மியன்மார், நேபாளம், நெதர்லாந்து, நியூ சிலாந்து, நோர்வே, பாகிஸ்தான், பபுவா நியூகினியா, பிலிப் பைன்ஸ், ரஷியா, சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து, கிழக்கு திமோர், ரியுனிஷியா, அமெரிக்கா, வியட்நாம், சம்பியா, சிமபாப்வே ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர். (ஒ-3)

## சைக்கிள் திருடியவருக்கு தண்டனை

யாழ்ப்பாணம்,ஒக்.17

சுமார் 7 ஆயிரம் ரூபா பெறுமதியான சைக்கிளை திருடினார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைதுசெய்யப்பட்டு, யாழ்நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட நபருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒருவருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.(ஒ-9-5)

## மைதானத்தில் மிதிவெடி அகற்றும் பணி

கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய விளையாட்டு மைதானச சூழலில் கண்ணிவெடி அகற்றும் பணிகள் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெரிதும் சேதடைந்த இப்பாடசாலைக் கட்டடத்தை புனரமைத்து அடுத்த ஆண்டுமுதல் இயங்கவைக்க பாடசாலை நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இப்பாடசாலை கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி)

## மிதிவெடிகளை அகற்றக் கோரிக்கை

கொழும்பு,ஒக்.17

காரைநகர் பலகாட்டுக் குறிச்சியில் நாராயணி கேணிக்கு தெற்கேயும், நம்பாலை வீதிக்கு தெற்கேயும் கடற்படைத்தளம் வரையுள்ள பிரதேசத்தில் மிதிவெடிகள் இருக்கலாம் என அஞ்சப்படுவதால் வன்னியிலிருந்துவரும் மக்கள் அப்பகுதியில் மீளக்குடியமரத் தயங்குகின்றனர்.

முன்னர் நம்பாலை வீதிக்குத் தெற்கே இரு இடங்களில் இருவர் மிதிவெடியில் அகப்பட்டு காலை இழந்துள்ளனர். எனவே, மக்கள் இவ்விடங்களில் மீளக்குடியமர வசதியாக மிதிவெடிகளை அகற்ற ஏற்ற ஒழுங்குகளைச் செய்துதருமாறு காரைநகர் வியாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.(ஒ-ரி)

## தாலி அபகரிப்பு!

அச்சுவேலி,ஒக்.17

யன்னல் கம்பியை வளைத்து வீட்டினுள் புகுந்த திருடன் உள்ளே உறங்கிக் கொண்டிருந்த பெண்மணியின் கழுத்தில் இருந்த 11 பவுண் எடையுள்ள தாலிக்கொடியை வெட்டியெடுத்துக் கொண்டு ஓடித்தப்பிய சம்பவம் கடந்த திங்கட்கிழமை அச்சுவேலி தெற்கில் உள்ள வீடொன்றில் இடம் பெற்றுள்ளது. (ஒ-11)


# கண்ணீர் அஞ்சலி

கணபதி பேக்கரி உரிமையாளராகிய திருமதி த.வசந்தகுமாரி அவர்களின் பாசமிகு தகப்பனார்

## வல்லிபுரம் செல்வநாயகம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு துயரடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகம்

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.

(C/24284)

# துயர் பகிர்கின்றோம்

எமது அச்செழு பகுதி கிராம அலுவலர் திரு.செ.வசந்தகுமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

## வல்லிபுரம் செல்வநாயகம்

(தையிட்டி, காங்கேசன்துறை)

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், கோப்பாய். (9564)

கோப்பாய் பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினர்.

# தொடர்புகொள்ளவும்

நேற்றுப்பிற்பகல் முகமாலையில் இருந்து யாழ். வந்த மினி பஸ்ஸில் சேலைகளும் விலையுயர்ந்த ஆடைகளும் அடங்கிய பை (BAG) ஒன்று தவறுதலாக மாறி எடுத்துச் செல்லப்பட்டுவிட்டது. ஆகவே, மாறி எடுத்துச் சென்றவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியாளரிடம் தொடர்புகொண்டு எம்மிடமுள்ள தங்களது பையை எடுத்துச்செல்லுமாறு வேண்டுகின்றோம்.

முகவரி: R.வனித்தா

68, பலாலி வீதி, திருநெல்வேலி.

T.P.No. 2094

(9563)

# தேவை

பிறிட்ஜ் வேலைகள் செய்வதில் அனுபவமுள்ள ஒருவரும் காஸ் வெல்டிங் வேலைகள் செய்வதில் அனுபவம் வாய்ந்த ஒருவரும் தேவை.

உடனே தொடர்புகொள்ளவும்:

கணேசர் பிறிட்ஜ் மெக்கானிக் அன் வெயின்ரிங்

உரிமையாளர்: T.ரூபன்

மூத்தநயினார் கோயிலடி, ஆனைக்கோட்டை.

T.P. No: 0777242155

(9546)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| சீட்டிழுப்பு வாரம் | 414 | டிக்கட்டின் நிறம் - நீலம் |
|---|---|---|
| திகதி | 15.10.2002 | செல்லுபடியாகும் தொடர் இல. 4516542-4529751 |

வெற்றி இலக்கங்கள்: 07 17 23 51

லக்கினம்: இடபம்



ஜக்பொட் பரிசு ரூபா. 1,601,500/- வெல்லப்படவில்லை

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 2,252,550/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரு.) | மொத்தப் பரிசுத் தொகை(ரு.) |
|---|---|---|---|
| 1 இல | 291,531 | 10 | 2,915,310 |
| 2 இலக்கங்கள் | 26,794 | 20 | 535,880 |
| 1 இல + லக்கினம் | 26,523 | 30 | 795,690 |
| 2 இல + லக்கினம் | 2,425 | 100 | 242,500 |
| 3 இலக்கங்கள் | 703 | 500 | 351,500 |
| 3 இல + லக்கினம் | 73 | 5,000 | 365,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | - | 1,601,500 | - |
| மொத்தம் | 348,053 | - | 5,605,880 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா. 5,605,880/-

தொடர் இல. 5513476க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள் 2002 ஒக்டோபர் 18ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

4517355-7-68

4519156-1-74

4527738-8-48

4517742-4-50

4526873-0-48

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

# மூன்றாம் ஆண்டின் நினைவலைகள்



பாரில் 13 - 07 - 1929

சொர்க்கத்தில் 22 - 10 - 1999

## திருமதி செல்வரத்தினம் நடராசா

திதி: 2002.10.17

அன்பினால் எங்களை அரவணைத்த அன்னையே!

அன்புருகும் வார்த்தைகளைச் சொரிந்த தெய்வமே!

அரவணைப்பில் வளர்ந்தவர்கள் கதறியழ - இன்று

நீ மட்டும் இல்லையம்மா! போனதுமோ மூன்றாண்டு.

உங்கள் ஆத்மா சாந்தியடைய

எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நிரந்தர முகவரி: கண்டுவில் ஒழுங்கை, சாவகச்சேரி.

தற்காலிக முகவரி: "சேதுபதி", வதிரி, கரவெட்டி.

(9497)

# எதிர்கால நம்பிக்கைக்கு தொழில்சார் கற்கைநெறிகள்

ஆசியாவிலேயே மிகவும் உயர்ந்த கல்வியறிவு நிலையான 91.8 வீதத்தை வளர்முகநாடுகளுக்குள் இலங்கை கொண்டுள்ளது. அதிலும் இலங்கை கல்வி அறிவு விகிதத்தில் தமிழர்களின் பங்கு முன்னொருகாலத்தில் பெருமைப்படத்தக்க வகையில் இருந்தது. இலங்கையின் பல்வேறு அரச, தனியார்துறைகளில் பல உயர் பதவிகளை தமிழர்கள் வகித்தார்கள். ஆனால், இன்றுள்ள நிலைமையும், எதிர்காலத்தில் இனிவரப போகும் நிலைமையும் அபாய எச்சரிக்கை தருவதாகவே உள்ளது.

ஏனெனில், யாழ்ப்பாண மக்கள் கல்விச் செல்வத்திற்கு அன்றுதொட்டு இன்றுவரை பெரும் முக்கியத்துவம் கொடுத்து வந்துள்ளார்கள். எனினும் கடந்த பல வருடங்களாக இடம்பெற்று வந்த போரின காரணமாக யாழ்குடாநாடு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாக மாறியது. யாழ்ப்பாணத்திற்கும் வெளி உலகிற்கும் இடையிலான தொடர்புகள் குறைவடைந்து காணப்பட்டன. இதனால் வெளியுலகத்தின் கல்வி, தொழில்நுட்ப, விஞ்ஞான, மருத்துவ, விவசாய வளர்ச்சிகளின் பரிமாணங்களை அறிந்துகொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் யாழ். மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை. இதனால் இன்றைய உலகின் அறிவு வளர்ச்சிக்கும யாழ்.மாணவர்களது அறிவுமட்டத்திற்கும் இடையே ஓர் இடைவெளி உள்ளது என்பதனை எவரும் மறுப்பதற்கில்லை. இந்த இடைவெளியானது உடனடியாக குறைக்கப்படவேண்டும். ஏனெனில், இந்த இடைவெளி தொடர்ந்தால் எமது மாணவ சமுதாயம் எதிர்காலத்தில் பாரிய பின்னடைவினை சந்திக்க நேரிடும். இன்றைய காலகட்டத்தில் இளைஞர்களையும், யுவதிகளையும் எச்சரிக்கை செய்து வழிப்படுத்த வேண்டிய கடமை எமது பிரதேச கல்விமான்களுக்கும், கல்வியுடன் தொடர்புடைய உயர்பதவி வகிப்பவர்களுக்கும் உண்டு. யாழ்.மாவட்டத்தின் கல்வி மற்றும் தொழில் ரீதியாக அண்மைக் காலத்தில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தினால் எடுக்கப்பட்ட புள்ளி விவரத் தரவுகளை அவதானிப்பதன்மூலம் யாழ்.மாவட்டத்தின் கல்வித்துறையில் அடையப்படவேண்டிய இலக்கினை நாம் உணரமுடியும்.

அட்டவணை I தரவின் பிரகாரம் தொழில்சார் தகைமை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவே உள்ளது.

| தொழில் | சதவிகிதம் |
|---|---|
| உயர்முகாமைத்துவம், நிர்வாகிகள் | 0.7% |
| தொழில்சார் தகைமை உடையவர்கள் | 3.3% |
| வேலை அற்றோர் | 20.0% |
| வீட்டுப் பணிப்பெண்கள் | 35.5% |
| கல்வி கற்போர் | 8.4% |
| தொழில் நுட்பவியலாளர் | 1.7% |
| ஆசிரியர், சுயதொழிலாளர், வர்த்தகர்கள் ஓய்வூதியர்கள், விவசாயிகள், சேவை நிறுவனங்கள் | 30.4% |
| **கல்வி** | **கற்றோர் விகிதம்** |
| எழுதவாசிக்கத் தெரியாதோர் | 1.7% |
| முறையாகக் கல்வி கற்காதோர் | 0.7% |
| வகுப்பு 5 வரை கற்றோர் | 9.7% |
| வகுப்பு 6 - 9 வரை கற்றோர் | 20.7% |
| ஜி.சீ.ஈ. சாதாரணதரம்வரை | 10.4% |
| ஜி.சீ.ஈ. சாதாரணதரம் | 28.8% |
| ஜி.சீ.ஈ. உயர்தரம் | 13.7% |
| தொழில்சார் கல்வி கற்றோர் | 0.7% |
| தொழில்நுட்பக் கல்வி கற்றோர் | 1.3% |
| பட்டதாரி மாணவர்கள் | 3% |
| பட்டதாரிகள் | 3% |

அட்டவணை I

எனவே, அந்த வகையில் ஒரு பாரிய சமூகப்பொறுப்பை தொழில்சார் கற்கைநெறிகளுக்கான நிறுவனம் (IPAS) கொண்டுள்ளது. அச்சமூகப் பொறுப்பானது வடபகுதி இளைஞர், யுவதிகளை வழிநடத்தி அவர்களது எதிர்கால வாழ்வை வளம்படுத்துவதோடு அவர்களை நாட்டின் பல்வேறு அரச, தனியார் துறைகளில் முக்கிய பதவி வகிப்பவர்களாக மாற்றத் திடசங்கற்பம் பூண்டுள்ளது. இன்றைய அரசாங்கமும், அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்க உத்தேசித்துள்ளமையால் அதற்கும் பல காரணங்கள் பின்புலமாக உள்ளமையும் தனியார் துறைகளிலேயே அதிக வேலைவாய்ப்புக்களை பெறக்கூடிய சூழ்நிழலை எழுந்துள்ளது. இலங்கையில் ஏற்கனவே, தொலைத் தொடர்புச் சேவை தனியார்மயமாக்கப்பட்டுள்ள நிலைமையிலும் மேலும் வங்கி, காப்புறுதி போன்ற சேவைகளும் தனியார் மயமாக்கப்படவுள்ள நிலைமையிலும் அரச துறைகளின் எண்ணிக்கை குறைவடைவதன்மூலம் அரச வேலைவாய்ப்புக்கள் குறைவடைய உள்ளன.

எனவே, தனியார் துறையிலும் போட்டி அடிப்படையில் வேலைவாய்ப்புகளைப் பெறமுடியுமே தவிர ஏனைய காரணிகள் எதிர்காலத்தில் புறக்கணிக்கப்படும். எனவே, ஒவ்வொரு இளைஞர், யுவதியும் தமது எதிர்காலத்தில சிறந்த முறையில் திட்டமிட்டு அதற்கிணங்கத் தமது கல்வியைத் தீர்மானிக்க வேண்டிய கட்டத்தில் உள்ளனர்.

தென்னிலங்கையை பொறுத்தவரையில் The Organization of Professional Associations (OPA) இனால் காலத்திற்கு காலம் நடத்தப்படும் Career Education இனால் அங்குள்ள இளைஞர்கள், யுவதிகள் தமது எதிர்காலத்திற்கு தாம் எத்தகைய துறைநோக்கி கவனம் செலுத்தினால் தமது எதிர்காலம் நன்றாக அமையும் என்பதனை அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. ஆனால், அத்தகைய வசதிகள் எதுவும் இங்கு ஆரம்பிக்கப்படவில்லை. எனினும் IPAS நிறுவனமானது இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தொழில்சார் வழிகாட்டியாக கணக்கியல், முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் வேலை வாய்ப்புக்களை வழங்கக கூடிய கல்வியை வழங்க வுள்ளது. அத்தோடு யாழ்ப்பாணத்தில் முதல்முறையாகத் தமது மாணவர்களுக்கு Visual Study System அடிப்படையில் ஆங்கில அறிவினைப் புகட்டி வருகின்றது. அத்துடன் இலங்கையிலேயே முதன்முறையாக ஒரு கல்வி நிறுவனத்துடன் இணைந்த நடைமுறை அனுபவத்தினைப் பெறவும் வசதிகளை இந்த நிறுவனம் கொண்டுள்ளதுடன் ஒவ்வொரு தொழில்சார் கற்கைநெறிகளுக்கான நிறுவனங்களுடன் நேரடியான தொடர்பினையும் கொண்டுள்ளது.

அந்தவகையில்:-

- **Chartered Accountancy**
- **CIMA - U.K.**
- **CMA - Sri Lanka**
- **SLIM - Sri Lanka**
- **aat - Sri Lanka**

ஆகிய கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இவை தொடர்பான அனைத்து விவரங்களையும் கொண்ட வெளியீடு ஒன்றையும் இந்த நிறுவனம் வெளியிட்டுள்ளது. எனவே, மாணவர்கள் தாம் செலவிடும் நேரத்தினையும், பணத்தினையும் விரயமாகாது மிகவும் பயனுறுதி மிக்க முறையில் இக்கற்கைநெறிகளை பயிலுவதன் மூலம் ஒரு மனிதவளம் பொருந்திய மூளைசாலியாக மாற முடியும்.

**எஸ்.வசந்தகுமார்**

# உடலைப்பேணி இளமையைக் காக்கும் இராச மூலிகையான ரிஷி காளான்

மக்களிடையே அநேக மருத்துவ உணவுப் பழக்கங்கள் இருக்கின்றன. இருமல் ஏற்பட்டால் முசுக்கொட்டை சம்பல், தூதுவளை சம்பல், குப்பைமேனி சம்பல். வாய் அவியல் ஏற்பட்டால் முல்லைச் சொதி, அகத்திச் சொதி, பப்பாசிக்காய் சொதி, நீத்துக்காய் சொதி. மலச்சிக்கல் ஏற்பட்டால கீரை வகை, கதலி வாழைப்பழம், பப்பாப்பழம், பப்பா விதை, வாழைப்பூ. உடல் வெளிறிய நிலை கண்டால், முருக்கமிலை சொதி, பொன்னாங்காணி, கடலை, கரட் இப்படி இயற்கை மருத்துவ வழக்கங்கள் பலவுண்டு.

இவை தவிர, மிளகு பச்சையாகச் சாப்பிட்டால் பசி தூண்டப்படுகிறது. அம்மிளகை வறுத்து அவித்து குடித்தால் சமிபாடு சீராகிறது. ஒரு துண்டு இஞ்சி பச்சையாகச் சாப்பிட்டால் பசி தூண்டப்படுவதுடன் புத்தியும் கூர்மையாகிறது. இஞ்சியை அவித்துச் சாப்பிடும்போது வாய்வைப் போக்கி மலச்சிக்கலை நீக்குகிறது. சூடு குறைகிறது. வெந்தயத்தை விழுங்கினால் வயிற்றிலுள்ள வாயுவை வெளியேற்றும். அதை அவித்துச் சாப்பிடும்போது மலச்சிக்கல், மூலவியாதி போன்றவற்றை நீக்கும்.

இப்படி கடுகு, உள்ளி, நற்சீரகம் இப்படியாக என அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வுபஉணவுகளால் பெறும் நன்மைகளும், தீரும் நோய்களும் சொல்லில் அடங்கா. இந்த உபஉணவுகள்தான் மருந்து. மருந்துதான் உணவு.

இவற்றிற்கு மேலாக அறிமுகமாகி வருவதே "ரிஷி காளான்". இந்தக் காளான் மருந்தா? உணவா? இது அனேகர் எழுப்பும் கேள்வி. இக்காளானைப் பற்றிய அறிவும் அறிமுகமும் இல்லாமையே இக்கேள்விக்குக் காரணம்.

யாழ்.மக்களுக்கு மிக சத்தான சொத்தாக பழைய வைக்கோல் கொண்டு காளான்கள் உருவாக்கிக் காட்டப்பட்டது 90களில் ஆகும். நோயற்ற வாழ்வு வாழ இந்த உப உணவு உதவும் என்பதாலேயே காளான் உற்பத்தி குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இன்றைய அதி நவீன உலகில் சொல்லப்படும் பல நோய்களுக்கு மருந்தாக காளான் உதவுகிறது. வயிற்றுப்புண், ஆஸ்த்துமா, தோல் வியாதிகள், கிரந்தி, சலரோகம், தீராத வாய்ப்புண், மூலவியாதி போன்றவற்றைத் தீர்க்கும் ஓர் இராச மூலிகையான ஓர் உணவு இது. ஆகவே, இந்த உப உணவை நாம் தொடர்ந்து சாப்பிடும்போது பழுதடைந்த கலங்களைப் புதுப்பித்து நோய்யற்ற உடலைத் தரவல்லது.

**டாக்டர் எஸ்.இராசபூபதி**

இராச மூலிகையான ரிஷி காளானுக்கு நோய்களை வெளிக்கொணரும் ஆற்றலுண்டு. அதாவது ரிஷி காளானை ஒருவர் குறைந்தது 4 கிழமைக்கு மேல் தொடர்ந்து உட்கொள்ளும் போது அவரது உடலில் கடியும் மணமும் வியர்வையும் ஏற்பட்டால் அவரின் உடலில் இருந்து நஞ்சுத்தன்மை வெளியேறுவதை நாம் அவதானிக்கலாம். மேலும் கண் சிவந்து பூளை ஏற்பட்டால் அவர் ஈரல் சம்பந்தப்பட்ட நோய் உள்ளவர் என்பதை அறியலாம். மேலும், மூக்கில் கடி ஏற்பட்டால் நுரையீரல் நோய் என்றும் காதில் கடி ஏற்பட்டால் சிறுநீரக வியாதி என்றும் ரிஷி காளானைக் கொண்டு நோய்களை அறியமுடியும். இந்தக் காளான் வில்லைகளை (குளிசை) தொடர்ந்து நாள் ஒன்றுக்கு 2,3 சோடிகள் வீதம் குறைந்தது 6 மாதங்களுக்கு உண்பதன் மூலம் உடலிலுள்ள நோய்களை நீக்குவதுடன் உடலைப் பாதுகாத்து இளமையைப பேணமுடியும். ஆகவே, இராச மூலிகையான ரிஷி காளானை உப உணவாக உண்பதன் மூலம் நோயற்ற வாழ்வு வாழமுடியும்.

# கடல் உணவு ஏற்றுமதி துறையில் விருது

'சுகந்த் எக்ஸ்போட்ஸ்' என்னும் பெயரில் 1976இல் எம்.சுகந்தசீலனால் ஆரம்பிக்கப்பட்டது சுகந்த் இன்ர நஷனல் நிறுவனம். இதன் பிரதான பணிகள் ஓடுடைய கடலுணவுகளை உலர வைத்து ஹொங்கொங், தாய்வான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதாகும். சங்குகளை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்வதும் இதனுள அடங்கும்.

தந்தையாரின் மறைவையடுத்து நிறுவனத்தை பொறுப்பேற்ற எஸ். அரவிந்தன் இதனை மேலும் முன்னேற்றப்பாதையில் நெறிப்படுத்தி வருகின்றார். சுறா, மீன் வகைகளின் உறுப்புகளை கொரியா, சீனா, மலேசியா, டுபாய் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதால் 1996இன் பின்னர் ஏற்றுமதி புத்துயிர் பெற்றுவருகின்றது. ஓடுடைய கடலுணவு வகைகளின் ஏற்றுமதியில் 75 சதவீதத்தையும், சங்கு ஏற்றுமதியில் 42 சதவீதத்தையும் தாமே செய்துவருவதாக அரவிந்தன் பெருமையுடன் கூறுகிறார்.

மன்னார், கற்பிட்டி, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, நீர்கொழும்பு, பேருவளை ஆகிய இடங்களில் சுழியோடிகள் தமக்கு இப்பொருள்களை வழங்கிவருவதாக நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளர் அரவிந்தன் தமது சாதனை பற்றிக் கூறிப் பெருமையடைகின்றார்.

பாரம்பரியமற்ற பொருள்களின் ஏற்றுமதிக்கான வெண்கலப்பதக்கம் நிறுவனத்துக்கு கிடைத்திருக்கின்றது.

இது குறித்து அரவிந்தன் கருத்துத் தெரிவிக்கையில், முதற்றடவையாக தமது நிறுவனம் இத்தகைய போட்டியில் கலந்துகொண்டதாகவும் முதலாவது முயற்சியிலேயே விருது ஒன்றைப் பெற முடிந்தது என்றும் கூறினார்.

நாடெங்கிலுமிருந்து நூற்றுக்கணக்கான வழங்குநர்கள் சுகந்த் எக்ஸ்போட்ஸ் நிறுவனத்துக்கு பொருள்களை வழங்குகின்றனர். ஆயிரக் கணக்கான மீனவர்கள் இதனால், தொழில் வாய்ப்பைப் பெற்றுள்ளனர்.

# உள்ளூர் கோழிக்குஞ்சுகளை விற்பனை செய்யமுடியாத நிலைமை

## உற்பத்தியாளர் கவலை

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை கோழிக்குஞ்சு உற்பத்தி நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் கோழிக்குஞ்சுகளை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.


கொழும்பிலிருந்து எடுத்துவரப்படும் கோழிக்குஞ்சுகளுடன் போட்டி போட்டு உள்ளூர் கோழிக்குஞ்சுகளை விற்பனை செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் ஒரே ஒரு கோழிக்குஞ்சு உற்பத்தித் தொழிற்சாலை அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் செயற்படுகிறது.

வலிகாமம் இடம்பெயர்வுக்கு முனனர் சிறுகைத்தொழில் திணைக்களத்தின்கீழ் செயற்பட்ட இத் தொழிற்சாலை இடம்பெயர்வின்போது அழியுண்டதை அடுத்து 1996ஆம் ஆண்டு மக்கள் மீளக் குடியமர்ந்த பின்னர் புதிதாக நிர்மானிக்கப்பட்டு, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் செயற்பட்டது. பின்னர் கிராமிய கூட்டுறவு வங்கிகளின் சமாசத்தினால் பொறுப்பேற்கப்பட்டது.

தற்பொழுது பிரான்ஸ் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட "அபேட் சேவர் 575" தாய் இனக் கோழிகள் மூலம் பெறப்படும் முட்டைகளில் இருந்து, முட்டைக்கோழிக் குஞ்சுகள், இறைச்சிக்கோழிக்குஞ்சுகள், சேவல் கோழிக்குஞ்சுகள் என்பன உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆறு தினங்களுக்கு ஒரு தடவை மூன்று வகைகளிலுமாக ஏறத்தாழ இரண்டாயிரம் குஞ்சுகள் பொரிக்க வைக்கப்படுகின்றன. மாதம் தோறும் ஐந்து தடவைகளில் 10ஆயிரத்துக்கு மேற்பட்ட குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.




அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் உற்பத்தியாகும் கோழிக குஞ்சுகள் கால்நடை உற்பத்தியாளா கூட்டுறவுச்சங்கங்கள் ஊடாக பண்ணையாளர்களுக்கு முட்டைக் கோழிக குஞ்சு ஒன்று 37ரூபா வீதமும் சேவல் கோழிக்குஞ்சு ஒன்று 15 ரூபா வீதமும் இறைச்சிக் கோழிக்குஞ்சு ஒன்று 42 ரூபா வீதமும் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில் தனியாரால் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரப்படும் கோழிக்குஞ்சுகள் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் மூலம் விற்பனை செய்யப்படுவதால் அச்சு வேலிக் கோழிக்குஞ்சுகளை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

"உள்ளூர் உற்பத்தியை மட்டும் நம்பியிருந்த யாழ்குடாநாட்டு சூழ்நிலை வெளிமாவட்ட உற்பத்திப் பொருள்களின் விற்பனைச் சந்தையாக மாறுவதும் பல்வேறு விதமான பொருளாதார சிக்கல்களை உருவாக்கி உள்ளது." - என உள்ளூர் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(ஒ-11)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால்

# மட்டக்களப்பில் செயற்பட்டுவரும் சிறுவர் இல்லங்களுக்கு அன்பளிப்பு

மட்டக்களப்பு,ஒக்.17

மட்டக்களப்பில் உள்ள உறவிழந்த சிறுவர்களின் இல்லங்களுக்கு மட்டகளப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒரு தொகுதி உடைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

சத்துருக்கொண்டான் அறவழி சிறுவர் நலன் பராமரிப்பு பெண்கள் இல்லம், திருப்பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்லம், தாமரைக்கேணி மங்கையர்கரசியார் மகளிர் இல்லம், கிரான் நாவலர் சிறுவர் காப்பகம், சித்தாண்டி சுவாமி நடராஜானந்தா சிறுவர் புனர்வாழ்வு மன்றக் கல்லூரி, களுவாஞ்சிக்குடி சமூகநலன்புரி அமைப்பு, கொக்கட்டிச்சோலை கதிரொளி சிறுவர் இல்லம், சந்திவெளி மாணிக்கவாசகர் சிறுவர் இல்லம், சந்திவெளி யோகர் சுவாமி சைவ மகளிர் இல்லம், களுதாவளை திருஞான சம்பந்தர் குருகுலம் ஆகிய சிறுவர் இல்லங்களிற்கே மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உடைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அத்துடன் வறிய குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கும் உடைகள் வழங்கப்படவுள்ளன. போரதீவுப்பற்று பிரதேச அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம், கோறளைப்பற்று வடக்கு அபிவிருத்தி ஒன்றியம், கிழக்கிலங்கை தன்னம்பிக்கை சமூக எழுச்சி நிறுவனம் ஆகிய நிறுவனங்களூடாக வறிய மக்களுக்கு உடைகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(ஒ)

### யாழ்.போதனா ஆஸ்பத்திரி

# பணிப்பாளர் சிபாரிசு செய்தால் டாக்டர்களுக்குத் தொலைபேசி

## ரெலிகொம் பிராந்திய முகாமையாளர் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஒக்.17

ஒரு வைத்திய அதிகாரிக்கு தொலை பேசி இணைப்பு அவசியம் வழங்கவேண்டும் என யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் சிபாரிசு செய்யுமிடத்து அவருக்கு தொலைபேசி இணைப்பினை முன்னுரிமைக் கட்டணம் இன்றி வழங்குவது குறித்து சிறீலங்கா ரெலிக்கொம் பரிசீலிக்கும்.

- இவ்வாறு தெரிவித்தார் சிறீலங்கா ரெலிகொம்மின் யாழ் பிராந்திய முகாமையாளர் எஸ்.அன்ரனிராஜன்.

யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் அரச வைத்திய அதிகாரிகளுக்கு முன்னுரிமைக் கட்டணம் இன்றி தொலைபேசி இணைப்புக்களை வழங்க சிறீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் யாழ். அலுவலகம் மறுத்துவருவது தொடர்பாக வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தது. இது தொடர்பாக நேற்று சிறிலங்கா ரெலிகொம்மின் யாழ்.அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவித்த முகாமையாளர் மேலும் கூறியதாவது:-

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்திய நிபுணர்களில் சுமார் 15 வீதமானோருக்கு ஏற்கனவே வதிவிட தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுள் சிலவற்றுக்கு முன்னுரிமைப் பணம் அறவிட்டும் ஏனையவற்றுக்கு அறவிடாமலும் இணைப்புகள் வழங்கப்பட்டன.

குறிப்பிட்ட வைத்திய நிபுணர் ஒருவருக்கு வதிவிட தொலைபேசி முன்னுரிமைக் கட்டணம் இன்றி வழங்கவேண்டுமா? என்பதனை வைத்தியசாலை நிர்வாகமே முதலில் தீர்மானிக்கவேண்டும் பின் அது தொடர்பாக எமக்கு சிபாரிசு செய்யலாம். வைத்தியசாலை நிர்வாகம் சிபாரிசு செய்யாத - தனிப்பட்ட - விண்ணப்பங்களுக்கு எல்லாம் முன்னுரிமைக் கட்டணமின்றி, இணைப்பை வழங்க முடியாது.

ஏற்கனவே யாழ். குடாநாட்டில் 3 ஆயிரம் இணைப்புகளை வழங்கியுள்ளோம். மேலும் 12 ஆயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் எமக்குக் கிடைத்துள்ளன. புதிதாக 3 ஆயிரம் இணைப்புகளை வழங்குவதற்கான பாரிய வேலைத்திட்டம் ஒன்றை தற்போது ஆரம்பித்துள்ளோம்.

யாழ்.குடாநாட்டில் இருந்து கிடைக்கும் அதிகளவு விண்ணப்பங்களையும் நிறுவனத்தின் செயற்பாட்டு வேகத்தையும் - கருத்திற் கொண்டு எமது நிறைவேற்றாளர் சபை சில கொள்கைத்திட்டங்களை விஷேடமாக வகுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கு உடனடியாக விண்ணப்பித்து தொலைத்தொடர்பு இணைப்பை பெறுவதற்கு முன்னுரிமைக் கட்டணத்தை ரத்துச் செய்வது தொடர்பான அங்கீகாரம் வழங்குவது குறித்து சிறீலங்கா ரெலிகொம்மின் நிறைவேற்று அதிகாரி மட்டுமே தீர்மானிக்க முடியும் என கடந்த யூன் மாதம் முதலாக எமக்கு அறிவுறுத்தப்பட்டது.

இந்த விசேட கொள்கைக்கு அமைவாகவே நாம் பணியாற்றுகிறோம். எமது நிறுவனத்திற்கு அதிகலாபம் ஈட்டிக்கொடுக்கவேண்டும் என்பது எமது தலையாய நோக்கமல்ல. எமக்குரிய அதிகார வரம்புகளுக்கு உட்பட்டே நாம் செயற்பட முடியும். கடந்த 3ஆம் திகதி எமது அலுவலகத்திற்கு வருகை தந்த வைத்திய அதிகாரிகள் சங்கப் பிரதிநிதிகளிடம் இது தொடர்பாக தெளிவாக எடுத்துக் கூறியிருந்தோம்.

முன்னைய காலங்களில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் புனர்வாழ்வு அமைச்சு என்பவற்றின் அனுமதி பெற்ற சகலருக்கும் இணைப்புகள் வழங்கப்பட்டன. இதன்போது ஒருவருக்கு பல இணைப்புகள் வழங்கப்பட்டதும் உண்டு. ஆனால், தற்போது அந்த நடைமுறை இல்லை.

மாதாந்தம் ஆயிரம் ரூபாவுக்குக் குறையாமல் பாவனைக் கட்டணம் கட்ட ஒப்புக்கொள்ளும் வகையான தொலைபேசி இணைப்புக்கள் இலங்கையின் சகல பாகங்களிலும் நடைமுறையில் உள்ள ஒன்றாகும். இது ஒருவருட ஒப்பந்த நடைமுறையாகும்.

யாழ்.குடாநாட்டில் சுமார் 30 வருடங்களின் பின்னதாக தற்போதுதான் கேபிள் இணைப்பு வேலைத்திட்டங்கள் பாரிய அளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

சாதாரணமாக ஓர் இணைப்பை வழங்குவதற்கு சுமார் ஒரு லட்சத்து 50ஆயிரம் ரூபா வரை எமக்கு செலவாகிறது. ஆனால், ஓர் இணைப்புக்கான தொடக்கக் கட்டணமாக ஆகக்கூடியது 30 ஆயிரம் ரூபாவை மட்டுமே அறவிடுகிறோம்.

நிலைமை இப்படியிருக்க யாழ்ப்பாணத்தில் ஒரு செயற்கைத் தட்டுப்பாட்டைப் பேண ரெலிகொம் முயல்வதாகவும் -

யாழ்ப்பாண மக்களை உச்ச அளவில் சுரண்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ள பகற்கொள்ளையாக எமது நடவடிக்கைகள் அமைவதாகவும் -

மிகவும் பாரதூரமான வார்த்தைப் பிரயோகங்களுடன் வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் யாழ்.கிளை வெளியிட்ட அறிக்கை எம்மை மிகவும் கவலைக்குள்ளாக்கியது.

எமது நிறுவனத்திற்கும் அதன் செயற்பாட்டுக்கும் களங்கம் ஏற்படுத்தும் வகையிலான அவ்வறிக்கையை நாம் வன்மையாக ஆட்சேபிக்கின்றோம். யாழ். குடாநாட்டு மக்கள் போரினால் மிகவும் நொந்து போயுள்ளார்கள். அவர்களை சுரண்டுவது எமது நோக்கமல்ல.

- இவ்வாறு முகாமையாளர் தெரிவித்தார். (ம-9)

---

## அரசும் விடுதலைப்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

றனர். சமாதான முயற்சிகளை குழப்பும் கருத்துக்களை வெளியிடாமல் ஆக்கபூர்வமான கருத்துக்களை மக்கள் முன் வைக்கவேண்டி பாரிய பொறுப்பு பத்திரியாளர்களின் கைகளில் உள்ளது. அதை உணர்ந்து அவர்கள் செயற்படவேண்டும்.

இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகள் வெற்றி பெற எமது நாடு மட்டும் அல்ல ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் சகல நாடுகளும் பூரண ஆதரவு வழங்குகின்றன. இங்கு சமாதானம் நிலைபெற்றதும் பல்வேறு உதவிகளை வழங்குவதற்கும் நாம் தயாராக உள்ளோம்.

கண்ணிவெடி அகற்றுதல், மக்களை மீளக்குடியமர்த்துதல், சேதமடைந்த நகரை மீளக் கட்டி எழுப்புதல் போன்ற பணிகளுக்கு நாம் உதவுவோம். கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்த நாம், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் கொழும்பில் பேச்சு நடத்தினோம். நேற்று வன்னியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளான அன்ரன் பாலசிங்கம், தமிழ்ச்செல்வன் ஆகியோருடனும் கலந்துரையாடினோம். பேச்சுக்கள் யாவும் ஆக்கபூர்வமாகவும் பரஸ்பர புரிந்துணர்வுடனும் இடம்பெற்றன.

சமாதானத்தை நோக்கிய பயணத்தில் சகல தரப்புகளும் உறுதியாக இருப்பதை இந்தப் பேச்சுகளின்போது உணரமுடிந்தது. இங்குள்ள பிரச்சினைக்குத் தீர்வு காண்பவர்கள் நாங்கள் அல்லர். இங்குள்ள மக்களே, முன்வந்து அவற்றுக்கு தீர்வு காணவேண்டும். இதுவே நிரந்தரமானதாக அமையும் - என்றார் அவர்.

டென்மார்க் தூதர் மைக்கல் ஸ்ரீம்போர்க் பேசுகையில்:-

வடக்கில் செய்தியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காகவே அவர்களுக்கு பயிற்சியளிக்க நாம் முன்வந்துள்ளோம் - என்றார்.

இந்த நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் ஆகியோரும் இந்த நிகழ்வில் உரை நிகழ்த்தினர். (எ-3-8)

---

## இறுதி இலக்கை...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்களை ஈகஞ்செய்திருக்கின்றார்கள். அந்த வரிசையில் இன்று மேஜர் செந்தூரியும் தன்னை இணைத்துக் கொண்டுள்ளார். இந்த அர்ப்பணிப்புக் கள் எங்களுக்கான சுதந்திர தேசம் உருவாகும்வரை தொடர்ந்து கொண்டே யிருக்கும்.

எமது தேசம் விடியவேண்டும் எமது மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க விரும்புகின்றனர். அந்தச் சுதந்திர நிலைமை விரைவில் உருவாகும்.

தமது கழுத்தில் போராளிகள் என்று சயனைட்டைக் கட்டிக் கொள்கிறார்களோ அன்றே அவர்கள் இந்தத் தேசத்துக்கு தம்மை அர்ப்பணித்து விடுகின்றார்கள்.

ஒவ்வொரு போராளியும் மாவீரராகும் போது தனது பணியை, தனது இலட்சியத்தை தனது அடுத்த சந்ததி தொடரும் என்று நினைத்துக் கொள்கின்றார்கள். அந்த மாவீரர்களின் கனவுகளை நனவாக்கவேண்டியது எம் அனைவரதும் கடமையாகும். - என்றார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் போராளி கமலினி உரை நிகழ்த்தும்போது - புலிகளின் மருத்துவப் பிரிவுப் போராளியாக இருந்த செந்தூரி நோய்வாய்ப்பட்டு, களத்தில் விழுப்புண் அடைந்த சக போராளிகளை அரவணைத்து அவர்களுக்கு சிகிச்சையளித்து அவர்களுடன் உடன் இருந்து பராமரித்த செயல்கள் உன்னதமானவை. அவரது இழப்பு மகளிர்படையணிக்கும் பலத்த இழப்பாக அமைந்திருக்கின்றது. - என்று கூறினார். (ம-4)

---

## 3 அங்குலம்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

யும் சிக்கியது.

இக்கும்பல் வெள்ளவத்தை, மொறட்டுவ, கல்கிசை, பியகம ஆகிய இடங்களில் ஆறு நகைக்கடைகளில் சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்திருக்கின்றது. (ம)

---

## மேஜர்...

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து வித்துடல் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டது. பெற்றோர், உறவினர்கள், போராளிகள், பொது மக்கள் ஆகியோர் புதைகுழியில் மண் இட்டனர். கடந்த 7வருடங்களுக்குப் பின்னர் போராளி ஒருவரின் வித்துடல் குடாநாட்டிலுள்ள துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டமை இதுவே முதற்றடவை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-4)

---


### தவறிவிட்டது

14-10-2002 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஸ்ரான்லி வீதியில் (ஆரியகுளம் சந்திக்கும், இராசாவின்தோட்டவீதி சந்திக்கும் இடையில்) உள்ள 503,சாளினி வெல்டிங் வேக்சொப்பிற்கு அருகில் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியவரின் சில்வர் நிறமுடைய samsung கையடக்க தொலைபேசி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சாளினி வெல்டிங் வேக்சொப்பில் கொடுத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (9575)

### தவறிவிட்டது

நேற்று நண்பகல் முகமாலையிலிருந்து யாழ்.வந்த பஸ்ஸில் எமது விலையுயர்ந்த ஆடைகள் அடங்கிய பை (BAG) ஒன்று தவறிவிட்டது. தவறுதலாக மாறி எடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் தொடர்பு கொண்டு தங்களது பையை பெற்றுக்கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

தொடர்பு:-
வ.சத்தியநேசன்,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
(9573)

### தவறிவிட்டது

நல்லூர் ஆலய முன் வாயிலில் மூக்குக்கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆலயத்தில் ஒப்படைத்துதவவும். (9577)


---

## முதலாம் ஆண்டுன் நீங்காத நினைவலைகள்



அமரர்
**சின்னையா மாணிக்கம்**

மலர்வு 25-03-1929
உதிர்வு 29-09-2001

விதியின் வழியிலே நீங்கள்
விண்ணகம் சென்றாலும் - எம்
நெஞ்சின் நினைவுகளிலே
நீங்காது நிலைத்திடுவீர்.

*1010/28, தலையாழி லேன்,*
*நாச்சிமார் கோவிலடி,*
*யாழ்ப்பாணம்.*
(9574)

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் முன்னாள் நடன ஆசிரியராகக் கடமையாற்றிய க.ராதாகிருஷ்ணன் அவர்களது தந்தையாரும், உடற்கல்வி ஆசிரியராகக் கடமையாற்றிய திருமதி சிவசக்தி ராதாகிருஷ்ணன் அவர்களின் மாமனாருமாகிய

### அமரர் நடராஜா கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், யா/ப.நோ.கூ.ச.)

அவர்கள் காலமானதையிட்டு அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யாழ்.நல்லூர் இ.த.பெ. பாடசாலை
(மங்கையர்க்கரசி வித்தியாலயம்)
(9579)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திருமதி ஜெயரஞ்சன் சியாமளா அவர்களின் பாசமிகு தந்தையார்

### சரவணமுத்து தர்மகுலசிங்கம்

அவர்கள் நேற்று (16.10.2002) புதன்கிழமை அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயருறுகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உத்தியோகத்தர்,
நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.

*வடமராட்சி கிழக்கு,*
*மருதங்கேணி.*
(C/24293)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தையிட்டி ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய தர்மகர்த்தாவாக இருந்து அரும் பெரும் சமயத் தொண்டாற்றிய காலஞ்சென்ற

### சின்னத்துரை கணபதிப்பிள்ளை

(பொறியியலாளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

அவர்களின் நினைவு நாளாகிய இன்று அவருடைய ஆத்மா சாந்தியடையவேண்டுமென எல்லாம்வல்ல கண்ணகை அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

*தையிட்டி,*
*காங்கேசன்துறை.*

ஆலய திருப்பணிச் சபையினர்,
ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம்.
(9576)

---

## மரண அறிவித்தல்

### நடராஜா கந்தசாமி

(முன்னாள் முகாமையாளர், யா/ப. நோ. கூ. ச.)

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கந்தசாமி நேற்று (16.10.2002) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வனும் ராசமணியின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (வவுனியா), ராஜேஸ்வரி (ஜேர்மனி), ஞானேஸ்வரி (மல்லாவி), ராதாகிருஷ்ணன் (ஆசிரியர், யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம்), பாலச்சந்திரன் (ஹொலண்ட்), தர்மயோகேஸ்வரி (சுவிஸ்), கைலைநாதன் (ஜேர்மனி), சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் காலஞ்சென்ற செல்வரட்ணம் மற்றும் சிறிஸ்கந்தராஜா (ஜேர்மனி), சிவபாதம் (தபால் அதிபர், மாங்குளம்), சிவசக்தி (விரிவுரையாளர், பலாலி ஆசிரிய கலாசாலை), ஜெயந்தி (ஹொலண்ட்), சுரேஸ்குமார் (சுவிஸ்), பகவத்கீதை (ஜேர்மனி), சிரூபலோசனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சண்முகநாதன், தங்கரத்தினம் மற்றும் அன்னலட்சுமி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*77, கஸ்தூரி வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.*
(9559)

தகவல்:
ராதாகிருஷ்ணன்
(மகன்).

---


**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த், கார்த்திக், மீனா
அருண் பாண்டியன் நடித்த
**தேவன்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.30, 1.30 (பி.ப.)

**ராஜா** யாழ்ப்பாணம்.
விஜய், சந்தியா, சிம்ரன், விவேக்
நடித்த
**யூத்** (ரீல்ஸ்)
காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (ப.நே.)
(C/24278)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
விக்ரம், கிரன், மனோரமா
நடித்த
**ஜெமினி** (ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 6.30 (S.L.T)

# அக்கரைப்பற்றில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஒன்றுகூடினர். ஹர்த்தாலி னால் இயல்புநிலை பாதிக்கப்பட்டது பதற்றமும் ஏற்பட்டது.

ஒருசாராரினால் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலினால் அமைதி குலையலாம் எனக் கருதப்பட்டதால் கல்முனை பொலீஸ் உதவி அத்தியட்சகர் நெவில் மோசஸ் தலைமையில் அக்கரைப்பற்று பொலீஸ் நிலையத்தில் உடனடியாகச் சமாதானக் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் அமைப்பு ஆகியவற்றின் உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள், இந்து - முஸ்லிம் - கிறிஸ்தவ மதப் பெரியார்கள் ஆகியோர் பங்குபற்றினர்.

அமைதி நிலையைக் கடைப்பிடிக்கும் வண்ணம் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் ஒன்று கூடி அக்கரைப்பற்று மணிக்கூண்டுக் கோபுரத்தடியில் திரண்டிருந்த மக்கள் முன்னிலையில் சென்று எல்லோரையும் கலைந்துசெல்லும்படி கோரினர். ஆனால், ஹர்த்தால் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர்கள் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவில்லை.

கடத்தப்பட்ட இளைஞரை விடுவிக்கும்வரை ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படும் என்று மக்கள் உறுதியாகக் கூறினர். அப்போது திகாமடுல்ல மாவட்ட எம்பியான சந்திரநேரு எல்லோரையும் கலைந்து செல்லுமாறும் அமைதி காக்குமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இவரது பேச்சையும் செவிமடுக்காத ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிடத் தொடங்கினர். ஒரு சில கற்களும் கூட்டத்தில் வந்து வீழ்ந்தன. அதைத் தொடர்ந்து நகர மத்தியில் திரண்டிருந்த மக்களைக் கலைப்பதற்காக பொலீஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டனர். பின்னர் முற்பகல் 11.30மணி தொடக்கம் பொலீஸார் இப்பகுதியில் ஊரடங்கை அமுல்ப்படுத்தினர். ஊரடங்கு இன்று காலை 6மணிக்கு நீக்கப்படும் என்று பொலீஸார் அறிவித்துள்ளனர்.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் அக்கரைப்பற்றுப் பிரதான வீதியில் வைத்து சில தமிழர்கள் இனம் தெரியாத குழு ஒன்றால் கடத்திச் செல்லப்பட்டு 2மணிநேரத்தின் பின் விடுவிக்கப்பட்டனர் என்று தகவல்கள் தெரிவித்தன.

(ம-12)

# வடக்கு - கிழக்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பணியகத்தில் நடைபெற்றது. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணைக்குழு தலைவர் மார்க்கிரஸ் குரு னோரோ தலைமையில் டென்மார்க் வெளிவிவகார அமைச்சின் இராஜாங்கச் செயலர் பீற்றர் லீஷோல்ட் ஹன்சன், செல்வி கழட்போவின், ரொபேட் ஈவன்ஸ் ஆகியோரும் - விடுதலைப் புலிகள் சார்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் அன்ரன் பாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கண்ணிவெடி அகற்றுதல், மீளக் குடியமர்வுக்குரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், புனர்நிர்மாணம், மீள்கட்டுமாணம் ஆகியவற்றுக்கு நிதி தேவைப்படுகின்றது.

விடுதலைப் புலிகளும் அரசும் செய்துகொண்டுள்ள கூட்டு செயலகத்தின் ஊடாக நிதியுதவி வழங்கப்பட வேண்டும் - என அவர் கேட்டுக் கொண்டார்.

இதேவேளை - யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று கொழும்பு திரும்பிய இந்தக் குழுவினர் இடையில் வவுனியாவில் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினர். இந்த மாநாட்டில் ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் ரொபேட் ஈவன்ஸ் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் பாதுகாப்பான நகரமாக காட்சியளிக்கிறது. அது சமாதானத்தின் நகரமாகவும் விளங்குகின்றது. அங்குள்ள மக்கள் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்களாக உள்ளனர்.

யாழ்ப்பாணம் சென்றது உணர்வு பூர்வமான அனுபவம். இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கண்டவற்றைவிட அங்கு இப்போது நிலைமைகள் சீராகி உள்ளன. யாழ்.நகர் பாதுகாப்பான நகரமாக காட்சியளிக்கிறது. அது சமாதானத்தின் நகரமாகவும் விளங்குகின்றது. அங்குள்ள மக்கள் எதிர்காலத்தின் மீது நம்பிக்கையுள்ளவர்களாகவும் தங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையை மாத்திரம் கவனித்துக் கொண்டு ஏனோதானோ என்றில்லாமல் தங்கள் பிரதேசத்தைக் கட்டியெழுப்பவேண்டும் என்பதில் ஆர்வமாகவுள்ளனர்.

தற்போதைய சமாதான நிலைமைகளை தகுந்த முறையில் முன்னெடுத்து நகர்த்திச் செல்லவேண்டும். என்ற சுய பிரக்ஞை கொண்டவர்களாகவும் அவர்கள் இருக்கின்றனர். இலங்கையின் சமாதான முயற்சிகளிலும் நாடு அமைதியடைந்து எதிர்கால நன்மையான நிலைமைகளை நோக்கி முன்னேறவேண்டும் என்பதிலும் நாங்கள் மிகவும் ஆர்வமாக இருக்கிறோம். இப்போது சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

மேலும் பல நேரடிப் பேச்சுக்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளமை, சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டுகின்றன. சமாதான முயற்சிகள் இலகுவானதல்ல என்பது அனைவருக்கும் தெரியும். அதிகாரம் பரவலாக்கப்பட்ட நிர்வாகத்துக்கும் மத்திய அரசுக்கும் இடையிலான நன்மைகள், அவற்றின் பொறுப்புக்கள் இரண்டுக்குமிடையிலான சுமுகமான உறவுநிலைமைகள் என்பவை பற்றி இன்னும் பேசவேண்டியுள்ளது. ஆயினும், நேரடிப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதும் இரு தரப்பினரும் இன்னும் பல பேச்சுக்களுக்குத் தயாராகியுள்ளமையும் பல வருடங்களில் அல்ல. ஒரு சில மாதங்களிலேயே நடைபெற்றுள்ளது. இதனால், இலங்கை மக்கள் அனைவருமே உற்சாகமடைந்துள்ளார்கள் என்று அவர் தெரிவித்தார்.

(எ-3-ஆ)

## வவுனியாவில் இன்று ஆர்ப்பாட்டம்

வவுனியா,ஒக்.17

வவுனியா சி.சி.த.க. பாடசாலையின் முன்பாக அமைந்துள்ள கல்யாண மண்டபத்தில் இருந்து படையினரை வெயியேற்றுமாறு கோரி இன்று மேற்படி பாடசாலை முன்றிலில் ஆர்ப்பாட்டமும் மறியற் போராட்டமும் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் கல்விச் சமூகத்தினர் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்வர். (எ)

## உண்மையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை குழப்பமாட்டோம் என்பது உறுதி.

இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாக வேறுசில அரசியல் லாபம் கொண்ட சக்திகள் பின்னணியில் நின்று அப்துல் பஜட் என்பவரை மறைத்து வைத்துவிட்டு தங்களது தேவையை அரங்கேற்றியுள்ளனர். அவ்வாறான இலக்கத்தகடு இல்லாத வாகனமெதுவும் தமிழ் பகுதியில் சென்றதாகக்கூட எந்தத் தடையமும் இதுவரை துலங்கவில்லை.

எனவே, இந்த வீணர்களின் மாய வலையில் விழுந்துவிடாது சுயபுத்தியுடன் நடந்து எமது சகோதரத்துவ உணர்வைக் கட்டிக்காக்க உறுதியினை பூணுவோம். தமிழ், முஸ்லிம்கள் என்றுமே மிகவும் ஒற்றுமையாகவே வாழ்ந்துள்ளனர். இறுதிவரை நாம் சகோதரர்களாகவே வாழ்வதற்கு உறுதி கொள்வதுடன் எமது பிரச்சினைகளை நாம் பேசித்தீர்த்துக் கொள்வதே சிறந்தது - என்ற குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் மீது தாக்குதல் நடத்தினார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

அக்குற்றச்சாட்டின் பேரில் 1997 ஜனவரி 20ஆம் திகதி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஷிராணி திலகவர்த்தனா ஏழு ஆண்டுகால சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பு வழங்கினார்

இத்தீர்பை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

மேல் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகளுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு மீதே நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, எஸ்.விக்கினேஸ்வரன், அமிர் இஸ்மாயில், ஆகியோர் தனித்தனியாக மூன்று தீர்ப்புக்களை வழங்கினர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தப்படுவோரை அவர்களது வாக்குமூலம் ஒன்றை மட்டுமே அடிப்படையாக வைத்து குற்றவாளியாகக் காணமுடியாது என்ற வரலாற்றுத் தீர்ப்பை அவர்கள் வழங்கினர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளின் விசாரணைப் போக்கை இந்தத் தீர்ப்பு பெரிதும் மாற்றியமைக்கக்கூடியதாக அமைந்துள்ளது என சட்டவல்லுனர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த வழக்கில் மேன்முறையீட்டு வாதங்களை மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி கலாநிதி ரஞ்சித் பெர்னாண்டோ, சட்டத்தரணி அவிநாயகமூர்த்தியின் அனுசரணையுடன் நீதிமன்றில் சமர்ப்பித்தார். (ம)

## சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டின் எதிர்காலத்தில் அக்கறை கொண்டுள்ள திடமான பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவத்தை நாட்டு மக்கள் ஏற்று நடக்கவேண்டும்.

அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பிலும் விசுவாசமில்லாது செயற்படுவோரே சம்பவங்களுக்கு பொறுப்பானவர்கள். இத்தகையோர் நாளடைவில் இனங்காணப்படுவர்.

வடக்கு - கிழக்கில் இரு தரப்பினரின் தளபதிகளுக்குமிடையே ஒத்துழைப்பையும் நேரடித் தொடர்பையும் அதிகரிப்பதற்கு கண்காணிப்புக் குழு முயற்சி செய்து வருகிறது.

கஷ்டமான நிலைமைகளை அமைதியான முறையில் கையாளுமாறு ஆயுதப்படையினரைக் கேட்கிறேன். புலிகள் தூண்டுதல் நடவடிக்கையில் ஈடுபடாமல் ஒழுக்கத்துடன் நடந்து காட்டவேண்டும்.

கிளிநொச்சியிலுள்ள புலிகளின் தலைமை அலுவலகம் பூரண ஒத்துழைப்பு வழங்க உறுதியளித்துள்ளது. பொலீஸ் நடவடிக்கை கோட்பாடு மாற்றப்படவேண்டிய அவசியமுள்ளது.

- இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12)

## 19ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மென உயர் நீதிமன்றம் தீர்மானித்திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்திருத்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றில் சமர்ப்பித்து விவாதம் நடத்துவதாயின் நவம்பர் முதல் வாரத்துக்கு முன்னர் அதனை அரசு செய்யவேண்டும்.

நவம்பர் முதல் வாரத்துக்கு பின்னர் சுமார் ஒன்றரை மாதங்கள் வரவு - செலவு திட்ட விடயங்கள் நாடாளுமன்றினால் கையாளப்படவேண்டியிருக்கின்றன.

அதற்கு முன்னாயின் இம்மாதம் 22 திகதிக்கும் 25ஆம் திகதிக்கும் இடையில் நாடாளுமன்ற அமர்வுகளின்போது 19ஆவது அரசமைப்புத் திருத்த விடயத்தை அரசு நாடாளுமன்றில் பூர்த்தி செய்யவேண்டும்.

அதற்குள் தேவையான ஏற்பாடுகளைத் தயார் செய்து கொள்ளும் நிலையில் அரசுத்தரப்பு இல்லை எனக் கூறப்படுகிறது.

இதன் காரணமாக 19ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரும் அரசின் முயற்சி தற்காலிகமாக கைவிடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம)

# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா அருணாசலம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

கல்வயல், சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னையா அருணாசலம் அவர்கள் நேற்று(16.10.2002) புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக் கணவரும் செ. சேதுப்பிள்ளை, ஸ்ரீ.செல்லம்மா, அ.கதிரவேற்பிள்ளை, க.தங்கரத்தினம், அ.செல்வகுமாரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் பொ.வேலாயுதம், திருமதி ந.சரஸ்வதி, பொ.விநாசித்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இ.முருகையன், இ.கமலாம்பிகை, காலஞ்சென்ற இ.சிவானந்தன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.10.2002) வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அ.செல்வகுமாரன்,*
*426/38, 5/3, கே.சிறில் சி.பெரேரா*
*மாவத்தை, கொழும்பு - 13.*
*T.P.: 384878.*

தகவல்:
பிள்ளைகள்.
(9554)

## சின்னத்தம்பி வேலாயுதர்

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி வேலாயுதர் நேற்று (16.10.2002) புதன்கிழமை இரவு இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தங்கத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னக்குட்டி தம்பதிகளின் பாசமிகு மகனுமாவார். நாகரத்தினம் (இளைப்பாறிய நெசவு போதனாசிரியர்), பொன்னுத்துரை (பொது முகாமையாளர், முத்தையன்கட்டு ப.நோ.கூ.ச), மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (அதிபர், யா/நவபுரம் அ.த.க.பாடசாலை, கைதடி), கோபாலகிருஸ்ணன், தனேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேந்திரம் (சவூதி), ஸ்ரீரஞ்சினிதேவி, சண்முகரத்தினம் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர் சிக்மா பம்), ரதிதேவி, கமலாதேவி (ஆசிரியர், யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வி.), ஜெயபாலச்சந்திரன் (கனடா) ஆகியோரின் மாமனாரும், உதயமதி (லண்டன்), தர்சினி (கொழும்பு) மகிந்தினி (யாழ். தேசியற் கல்வியியல் கல்லூரி 2ஆம் வருட விஞ்ஞானபிரிவு ஆசிரிய மாணவி) பகீரதி, பிரசாந் (பரியோவான் கல்லூரி), பானுஜா, பானுஜன், மயூரி (கனடா) சுபவண்ணன் (கனடா), ஸ்ரீதரன் (லண்டன் கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 17.10.2002 வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி மேற்கு,*
*கைதடி.*

(9580)

தகவல்:
பொன்னுத்துரை
(மகன்)

## சிவஸ்ரீ அப்பாத்துரைக்குருக்கள் நடராஜக்குருக்கள்

கல்வியங்காட்டை வசிப்பிடமாகக் கொண்ட சிவஸ்ரீ அப்பாத்துரைக் குருக்கள் நடராஜக்குருக்கள் இன்று (17.10.2002) வியாழக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.10.2002) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புலவனார் வீதி,*
*கல்வியங்காடு.*

(9581)

தகவல்:
சிவஸ்ரீ ச.அருணாசலக்குருக்கள்

NEW SCIENCE COLLEGE
JAFFNA
2004 A/L
ஔதிகவியல்
WED 4.00-5.00 FRI 4.15-5.15
ஆரம்பம் 18.10.2002
புதிய பிரிவு
அலைகளும் அதிர்வுகளும்
SAT, SUN 6.00-7.00
ஆரம்பம் 11. 10.2002
BY : திரு.கருணாநிதி
B.Sc(spl.), Dip.in Ed.
(9578)

தேவை
தொலைபேசி நிலையம் ஒன்றில் பணிபுரிவதற்கு அனுபவமுள்ள ஆண்கள் தேவை. 21 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் விரும்பத்தக்கது என்பதுடன் கணனி அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
20.10.2002இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
இல. 11,
சேர் பொன் இராமநாதன் வீதி,
பரமேஸ்வராசந்தி.
(9550)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
யூனிவேர்சிற்றி
ITN
பலாலி வீதி, பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.
(3-24294)

குறைந்த கட்டணத்தை அறிமுகப்படுத்திய
SERENDIB
விமான சேவை
மாற்றத்தை உணருங்கள்....! கட்டணத்தை சிந்தியுங்கள்....!
உறுதிப்படுத்திய பயணச்சீட்டுக்கள்
விவரத்தை எம்மிடம் கேளுங்கள்.
தொடர்பு : செரண்டிப் மனோ, 13,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(24 மணி) 0777/517019, 0777/801038, 021/222 2007
(C/24270)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.10.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.